ஏப்ரல் 1989

விலை: 4/=



# அர்ச்சனா

கல்வி – முயற்சி – பெருவாழ்வு

சிறுவர் இலக்கியத் திங்கள் இதழ்

# மில்க்வைற்

## சவர்க்காரத் தொழிலகம்

"திருக்கோயிலைத் தினமும் வழிபடுங்கள்.
திருமுறையைத் தினமும் ஓதுங்கள்."

25 மில்க்வைற் நீல சோப் மேலுறைகளை அனுப்பி பஞ்சபுராணத்திரட்டு புத்தகத்தைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

525/2, காங்கேசன்துறை வீதி,
த. பெ. இல. 77
யாழ்ப்பாணம்.

"மில்க்வைற்"

தரமான கலர்ப்படப்பிரதிகள்

- அதிகுறைந்த கட்டணத்தில்
- மிகக் குறுகிய காலத்தில்

கலர்ப்படச்சுருள் கழுவுதல்
முற்றிலும் இலவசம்

- நவீன கம்பியூட்டர் இயந்திரத்தில் பிரதி செய்தல்
3 முதல் 5 நாட்களில்
விநியோகம்

**ஷப்ருவை** நாடுங்கள்

ஷப்ரு நிதி நிறுவனம்
207, மின்சாரநிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி எண். 22073



# அர்ச்சுனா

கல்வி — முயற்சி — பெருவாழ்வு





ஏப்ரல் - 1989

தனு: 1 விலை ரூபா: 4 - 00 கணை: 11


## மலரும் உள்ளங்களே!

மேதினம்:—

சர்வதேச தொழிலாளர் தினம்.

1886ஆம் ஆண்டு அமெரிக்காவில் சிக்காகோ நகரில் தொழிலாளர் வேலை நிறுத்தம் செய்தனர். ஆர்ப்பாட்டம் செய்தனர்.

அவர்கள் கோரிக்கைதான் என்ன?

இரவு, பகல் ஓய்வின்றி நாம் உழைக்கிறோம். இதனால் நமது உடல் நலம் பாதிப்பு அடைகிறது. ஆயுள்நலம் பாதிப்பு அடைகிறது. குடும்ப மகிழ்ச்சி குன்றிவிடுகிறது.

எனவே, 'ஒரு நாளைக்கு எட்டு மணி வேலை என்ற வரையறை வேண்டும் நியதி தேவை.'

இப்படிக் குரல் எழுப்பினர்கள் தொழிலாளர்கள்.

எட்டுமணி வேலை நாள் சட்டம் வேண்டும். -என்ற கோரிக்கை எழுந்தது. வெற்றி கிடைத்தது.

இப்போராட்டத்தினால் கிடைத்த வெற்றியின் விளைவே மேதினம்

இப்போராட்டத்தின் பயனாக தொழிலாளர் நலம் பற்றிய புதிய சிந்தனை மலர்ந்தது.

தொழில் நிறுவனத்தில் வசதிகள், பாதுகாப்புகள், மருத்துவ உதவிகள், கூடிய ஊதியம், விடுமுறை, ஊக்குவிப்பு, காப்புறுதி, நஷ்டஈடு, சேமலாபநிதி, தொழிலாளர் நலச் சட்டங்கள், தொழில் நீதிமன்றம் எனப்பல நன்மைகள் இதன் பயனாக விளைந்தன.

எனவே மேதினம் ஒரு விழா.

உழைப்பாளியின் உழைப்பினை உணர்வுகளை, உரிமைகளை போற்றும் விழா.

நீங்களும் பாடுபடுங்கள். உழைப்பினைப் போற்றுங்கள். உழைப்பாளியை கௌரவியுங்கள்.

இதுவே மேதின உணர்வு.



# நஸ்ரிடினின் சாதுர்யம்

ஓர் ஊரிலே ஒரு பிரசித்திபெற்ற வியாபாரிஒருவன் இருந்தான். அவன் ஒரு விவேகி. அத்துடன் ஒரு உலோபியும் கூட ஒரு நாள் அவ் வியாபாரி சந்தையில் மட்பாண்டங்களை வாங்கினான். ஆனால் அவற்றை காவிச் செல்ல எல்லோரும் மறுத்துவிட்டார்கள்.

'நீர் கூலி தரமாட்டீர். எம்மை ஏமாற்றிவிடுவீர், என்று எல்லோரும் மறுத்து விட்டார்கள்.

'நான் உங்களுக்கு மூன்று நல்ல புத்திமதிகள் கூறுவேன். இவை பணத்தை விடப் பெறுமதியானவை' என்றான் அந்த வியாபாரி.

நஸ்ரிடின் அதற்குச் சம்மதித்தான். அந்த வியாபாரி கழுதையின் மேல் அவனுக்குப் பக்கத்தில் சென்றான். நஸ்ரிடின் மட்பாண்டங்களைக் காவியபடி நடந்து சென்றுகொண்டே முதலாவது புத்திமதியைக் கூறுமாறு கேட்டான். 'அது உங்கள் கூடையைத் தூக்கிச் செல்ல உதவியாக இருக்கும்' என்று கூறினான்.

அதற்கு வியாபாரி 'யாராவது உனக்கு நடப்பதைவிட சவாரி செய்வது நல்லது என்று சொன்னால் அதை நம்பாதே' என்று கூறினான்.

'ஆ அது ஒரு உண்மையான நல்ல புத்திமதி' என்றான் நஸ்ரிடின்.

அந்த வியாபாரி தேநீர் குடிப்பதற்கு அப்பாதையில் அமர்ந்துகொண்டு தனது இரண்டாவது புத்திமதியைக் கூறினான்.

'யாராவது உனக்கு பசித்திருப்பதை விட வயிறு நிறைந்திருப்பது நல்லது என்று கூறினால் அதை நம்பாதே'

வீடு வந்து சேர்ந்த அந்த வியாபாரி வந்தவனை மடையனாக்கிவிட்டேன் என்று எண்ணி மிகவும் மகிழ்ச்சியடைந்தான். பின்பு மூன்றாவது புத்திமதியைக் கூறினான்.

செல்வி **சிவபூரணி விஜயசண்முகம்**

'உலகத்திலேயே உன்னைவிட மிகவும் முட்டாள் இருக்கிறான் என்று யாராவது சொன்னால் அவனை நீ நம்பாதே.'


'என்ன ஆச்சரியமான புத்திமதிகள்' என்று கத்தியபடி நஸ்ரிடின் தன் கைகளை உயர்த்தினான். அப்பொழுது அவன் கையில் இருந்த கூடை ஒரு சாக்கடையில் வீழ்ந்தது.

நஸ்ரிடின் நடந்துகொண்டே 'யாராவது ஒருவன் அந்தக் கூடையில் இருந்த ஒரு கோப்பையேனும் உடையாமல் இருக்கிறது. என்று சொன்னால் அவனை நீ நம்பாதே' என்று கூறிவிட்டுச் சென்றான்.

வியாபாரி அவமானத்தால் தலைகுனிந்தான்.

நன்றி மீஷா

## அட்டைப்பட விளக்கம்



# தலைசிறந்த கிரிக்கெட் ஆட்டக்காரர்

**தி. தவபாலன்**

நவீன கிரிக்கட்டின் தலைசிறந்த ஆட்டக்காரர் யார் தெரியுமா? அவர் இப்போது கிரிக்கட் ஆடுவதில்லை அவர் அவுஸ்திரேலியாவைச் சார்ந்த சேர் டொனல்ட் ஜோர்ஜ் பிராட்மன், சுருக்கமாக டொன் பிராட்மன் என அழைப்பர். கிரிக்கட் உலகில் முதல் 10,000 ஓட்டங்களைக் கடந்த ஒரே உன்னத ஆட்டக்காரர் பிராட்மன்.

1908 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 27ம் திகதி அவுஸ்திரேலியாவிலுள்ள நியு சவுத்வேல்ஸில் பிறந்தார்.

1927 முதல் 1948 வரை தனது கிரிக்கட் பயணத்தை 21 வருடங்கள் செய்தார். இவர் ஆடிய 21 வருடங்களும் கிரிக்கட்டின் பொற்காலமென உலக கிரிக்கட் ஆட்டக்காரர்கள் கூறுவர்.

ஆரம்பகாலத்தில் அவுஸ்திரேலியாவின் உள்நாட்டு அணிகளில் ஆடினார். தனது சொந்த இடமான நியு சவுத்வேல்ஸ் அணியில் அவர் இருந்தார். உள்நாட்டு அணிகளில் இவரது அதிகபட்ச ஓட்டங்கள் 1929 – 30ல் நடைபெற்ற நியு சவுத்வேல்ஸிக்கும் குயின்லாந்து அணிக்கும் இடையில் நடைபெற்ற ஆட்டத்திலாகும். ஓட்டங்கள் 452.

இந்த உள்நாட்டு ஆட்டங்களை கருத்திலெடுக்காது சர்வதேச ஆட்டங்களை நாடினார் பிராட்மன்.

1929 - 30ல் இங்கிலாந்தில் அதற்கெதிராக ஆடிய ஆட்டமே இவரது முதல் சர்வதேச ஆட்டமாகும். இதில் இவர் அடித்ததோ 334 ஓட்டங்கள். இதுவே உலகில் டெஸ்ட் ஆட்டங்களின் அதிகபட்ச ஓட்டங்களாகும். இந்த மனிதனது சாதனையை இதுவரை யாரும் முறியடிக்கவில்லை.

அடுத்து 1934ல் இங்கிலாந்திற்கு எதிராக ஆடிய ஆட்டத்திலேயே 304 ஓட்டங்களை எடுத்தார்.

இவ்வாறு தொடர்ந்து தனது கிரிக்கட் அணிக்காக ஓட்டங்களை அடித்துக் குவித்தார் பிராட்மன்.

1948ல் தான் ஓய்வு பெறப்போகும் நேரத்தில் அவுஸ்திரேலிய அணிக்கு கப்டனானார். கப்டனாகி பிறநாடுகளுடன் ஆடிய ஆட்டங்கள் அனைத்திலும் வெற்றியை (4) ஈட்டி தன் நாட்டு அணிக்கு பெருமை சேர்த்தார். ஆம், இளைப்பாறும் நேரத்தில்கூட எத்துணை வீரம் பாருங்கள்.

பிராட்மன் தனித்தனியாக 19 செஞ்சரிகளை பிறநாடுகளுக்கெதிராக ஆடி எடுத்தார்.

மொத்தமாக 338 இன்னிங்ஸ்களில் ஆடி 10117 ஓட்டங்களை எடுத்தார்

சர்வதேச ஆட்டங்களில் மட்டும் 6996 ஓட்டங்களை எடுத்தார். சராசரி 99.94.

(36ஆம் பக்கம் பார்க்க)

**பலூனிற் பறப்பது ஒரு மகிழ்ச்சியான விளையாட்டு.**
**விளையாட்டுக்காகப் பறக்கும்பலூன் வீரர்களும் இருக்கின்றார்கள்.**

அப்பா வந்தார். அழகிய பலூன் கொண்டு வந்தார். அதனுள் ஒரு வாயுவை நிறைத்தார் கைகளை விட்டதும் அந்த வண்ண பலூன் மேலெழுந்து அசைந்தது; பறந்தது. கோகுலன் பார்த்தான். வியப்போடு பாடினான். உரத்துப் பாடினான்.

"பலூன் பலூன் ஓடிவா
மாமரத்தில் ஏறிவா
பலூன் பலூன் ஓடிவா
மாளிகையில் ஏறிவா."

பாட்டு முடிந்தது.

னர். பலூனில் ஒரு கூடையைக் கட்டித் தொங்க விட்டனர். ஆனால் அதனில் ஒரு மனிதனை ஏற்றிப் பறக்க விடப் பயமாக இருந்தது. ஓர் ஆடு, ஒரு வாத்து ஆகியவற்றை அந்தக் கூடையில் ஏற்றிப் பறக்க விட்டனர். முதலாவது பயணம் வெற்றியாக அமைந்தது.

துணிச்சல் வந்தது. மனிதரும் பலூனில் ஏறிப் பறக்கத் தொடங்கினர். பெரிய பலூனைச் செய்தார்கள். பாரங் குறைந்த வளியை நிரப்பினர்கள் பலூனின் கீழ்ப் புறத்தில் ஒரு பெரிய

# பலூன் பறக்கும் கதை

'மனிதன் பலூனிற் பறந்த கதை தெரியுமா'' என்று அப்பா கதை சொல்லத் தொடங்கினர்.

பிரான்செஸ்கோ டி லாங் என்ற ஜேசு சபைத் துறவி ஒருவர் இருந்தார். பாரங் குறைந்த ஒரு வாயுவை பலூனில் நிரப்பி விட்டால் அது பறக்கும் என்று கருதினர். 1670 ஆண்டில் அவர் இதனைக் கூறினர்.

கூடையை இணைத்தார்கள். பறக்கத் தொடங்கினர்கள். பறக்கும் பலூனைக் கீழே இறக்குவது எப்படி? பலூனில் உள்ள வாயுவை மெது மெதுவாக வெளியேற்றினல் பலூன் சுருங்கும். கீழே பக்குவமாக இறங்கலாம்.

இன்று பல்வேறு வடிவங்களிற் பலூன்கள் செய்யப்படுகின்றன. பல்வேறு தேவைகளுக்குப் பயன்படுத்தப்படுகின்றன. மேல் வளி மண்டலத்தை ஆராய்


## அறிவுலக அறிமுகம்

*கலாநிதி சபா ஜெயராசா*

பறவை வானிற் பறக்கின்றது. தாமும் வானிற் பறக்க வேண்டுமென்று மனிதர் விரும்பினர். 1783 ஆம் ஆண்டில் ஒரு பெரிய பலூனைச் செய்தனர். அதனுள் வெப்பமான வளியை நிரப்பி

வதற்கு பலூனில் அனுப்பப்படும் கருவிகள் துணை செய்கின்றன. பேராசிரியர் பிக்கார்ட் என்பவர் இவ்வாறான ஆராய்ச்சிகளைச் செய்தார். 1937 ஆம் ஆண்டில் அவர் அனுப்பிய ஒரு பலூன் வெப்பம்

மிகுதியால் எரிந்தது. ஆனாலும் அவர் சளைக்கவில்லை. தொடர்ந்து பல பலூன்களை அனுப்பினார். மேல் வளி மண்டலத்தை விரிவாக ஆராய்ந்தார்.



**1934** ஆம் ஆண்டில் ஐக்கிய அமெரிக்க இராணுவத்தால் அனுப்பப்பட்ட இந்த பலூன் அறுபதாயிரம் அடி வரை உயர்ந்து சென்றது.

ஐக்கிய அமெரிக்கா, சோவியத் ஆகிய நாடுகள் இராணுவத் தேவைகளுக்காகப் பலூன்களைப் பயன்படுத்துகின்றன. பலூன்களில் வைத்து அனுப்பப்படும் கருவிகள் வான வெளியில் நிகழும் அணுக்கதிர் வீச்சுக்களை அளந்து கூறுகின்றன.

பலூன்களில் ஒலி பரப்புக் கருவிகளைப் பொருத்தி பறக்க விடுகின்றார்கள். பல்வேறு தகவல்களை அது ஒலி பரப்பிக் கொண்டே இருக்கும். இவை மட்டுமா? பலூனிற் பறப்பது ஒரு மகிழ்ச்சியான விளையாட்டு. விளையாட்டுக்காகப் பறக்கும் பலூன் வீரர்களும் இருக்கின்றார்கள்.

அப்பா கதை சொல்லிக் கொண்டிருந்தார். கோகுலன் பாடத் தொடங்கினான்.

காடு மலை தாண்டி வா
கன தூரம் பறந்து வா
பலூன் பலூன் ஓடி வா
பந்து போல ஓடி வா

பனை மரத்துக்கு மேலாக ஒரு பருந்து பறந்து கொண்டிருந்தது. அதன் இறகுகள் அகல விரிந்து கொண்டிருந்தன. பருந்து போல மனிதராலும் பறக்க முடியும்.



# தோட்டத்தில் ஒரு கடிகாரம்

லப்பாம் டப்பாம் இருவரும் ஊர் மக்களின் பாராட்டுக்களினுல் திணறிப் போனுர்கள். அவர்களுக்கு ஆச்சரியமாக இருந்தது. அவர்களுக்கு ஒன்றும் புரியவில்லே. ''துப்பறியிற தெண்டா என்னடா'' என்று டப்பாம் கேட்டான். 'அதுதான் எனக்கும் தெரியலே'' என்றபடி கடலேயை கொறித்தான் லப்பாம்.

பள்ளிக்கூடத்தில் கூட இவர்களின் சாகசம் பரவியிருந்தது. மாணவர்கள் இருவரையும் பாராட்டினுர்கள்.

இப்படி பலரது பாராட்டுக்களேயும் பெற்று மகிழ்ச்சியுடன் இருக்கும் போது ஒரு விபரீதம் பள்ளிக்கூடத்தில் நடந்தது

அன்று காலே பள்ளிக்கூடம் ஆரம்பிப்பதற்கு மணி அடிப்பதற்காக தலேமை வாத்தியார் நேரத்தைப் பார்த்தார். அவருக்குத் தலே சுற்றியது. மேசையில் கடிகாரத்தைக் காணவில்லே. திகைத்துப் போன அவர் பதட்டத்துடன் எல்லா இடமும் பார்த்தார். காணவில்லே.

பியோன் கந்தசாமியைக் கூப்பிட்டார். இருவரும் தேடிப்பார்த்தனர். ஒரு இடமும் காணவில்லே. இதற்கிடையில் கடிகாரம் களவு போன செய்தி பலருக்கும் தெரியவந்து விட்டது. ஆசிரியர்கள் அறையில் கூடினர். எல்லோரும் சேர்ந்து தேடினுர்கள் ஒரு இடமும் அகப்படவில்லே. 'ஓட்டைப் பிரித்துவந்து யாரோ எடுத்திட்டார்கள்.' என்ருன் கந்தசாமி எல்லோரும் ஓட்டைப் பார்த்தனர். ஓடு பிரிக்கப்பட்ட அடையாளம் இல்லே.

அந்த நேரம் கணக்கு வாத்தியார் அங்கு வந்தார். 'இது களவு. லப்பாம் டப்பாம் தான் துப்புத்துலக்கி கள்வனே கண்டு பிடிப்பார்கள்' என்ருர்..

அப்பொழுதுதான் தலேமை வாத்தியாருக்கும் மற்றவர்களுக்கும் லப்பாம் டப்பாம் கடத்தல் காரனேப் பிடித்த விஷயம் நினேவுக்கு வந்தது.

இருவரையும் கூட்டி வரும்படி தலேமை வாத்தியார் பியோன் கந்தசாமியை அனுப்பினுர்.

# லப்பாம் - டப்பாம்

வகுப்பில் கடலேயைக் கொறித்துக் கொண்டிருந்த இருவரும் பியோன் கந்தசாமி வகுப்பினுள் நுழைந்ததைக் காணவில்லே.

கந்தசாமி இருவரையும் ஏதோ பிராணிகளேப் பார்ப்பது போல் பார்த்தான். 'இந்த முட்டாள்களா களவைக் கண்டுபிடிக்கப் போகிருர்கள். தலேமை வாத்தியார் அரைக்கிறுக்கு இதுகள் முழுக்கிறுக்குகள்' என்று தனக்கு தானே சொல்லிக்கொண்டான். பின்பு இருவரையும் நோக்கி 'டேய் பெடியன்களா, தலேமை வாத்தியார் உடனே வரட்டாம் என்று சொன்னுர்.

லப்பாம் டப்பாமிற்குத் தலேயைச் சுற்றியது 'கையில் பிரம்பு வைத்திருக்கிருரா' அப்பாவித்தனமாக லப்பாம் கேட்டான்.

'தும்புக்கட்டு வைத்திருக்கிருர். வாங்கடா கெதியா' என்று சத்தம் போட்டுவிட்டுப் போய்விட்டான்.

லப்பாம் டப்பாம் இருவரும் வகுப்பறையை விட்டு வெளியே வந்தனர்.

'நாங்க கடலே திங்கறதை கணக்கு வாத்தி சொல்லிப் போட்டுது போல. அதுதான் தலேமைவாத்தி அடிக்கப் போகுது' என்ருன் லப்பாம். டப்பாமிற்கு உதறலெடுத்தது. நேற்

றடியைப் பார்த்தான். பின்பு 'வீட்டை ஓடு வமடா' என்ருன்.

தலைமை வாத்தியார் அறைவாசலில் நின்ற கந்தசாமி இவர்களைப் பார்த்தான். கெதியா வாங்கடா' என்று சத்தம் போடவே' வேறு வழியின்றித் தயங்கித் தயங்கிப் போஞர் கள்.

இவர்களைக் கண்டதும் தலைமை வாத்தி யார் முகம் மலர்ந்தது. 'ரேபிள் குளக் களவு போட்டுது. கள்வனைக் கண்டுபிடிக்க முடியுமா' என்று அன்பாகக் கேட்டார்

''டேபிள் குளக்'' என்று தலைமை வாத் தியார் சொன்னது அவர்களுக்குப் புரியவில்லை. திருதிரு என்று முழித்தனர்.

''என்ன யோசிக்கிறியள். கண்டுபிடிப் பியளா?'' என்று கேட்டார்.

பயத்தினுல் இருவரும் தலையை ஆட்டி ஞர்கள். பின்பு சத்தம் போடாமல் வெளி யேறினுர்கள். அடிவிழவில்லை என்ற மகிழ்ச்சி யில் சட்டைப் பையில் இருந்த கடலையை எடுத்துத் தின்ருர்கள்.

''டேபிள் குளக்கு என்னடா'' என்ருன் லப்பாம்.

## வில்வம் பசுபதி

''எனக்குத் தெரியாது. இனிப் பள்ளிக்கு வராம விடுவம்'' என்ருன் டப்பாம்.

அன்று பள்ளிக்கூடம் விட்டு வீட்டிற்குப் போகும்போது எதிர்பாராத வகையில் பூனைக் குட்டிச் சாத்திரியைக் கண்டார்கள்.

பூனைக்குட்டிச் சாத்திரியார் என்ருல் இரு வருக்கும் பயம். அவர் தூரத்தில் வரும் போதே கண்டுவிட்டார்கள். என்ன செய்வது எங்கே ஓடி மறைவது என்று திகைத்த அவர் கள் கண்களுக்கு ஒழுங்கை ஓரத்தில் இருந்த மரவள்ளித் தோட்டம் தென்பட்டது.

உடனே வேலியில் இருந்த இடைவெளிக் கூடாக ஓடிப்போய் மரவள்ளித் தோட்டத் திற்குள் படுத்துவிட்டார்கள்.

மரவள்ளித் தோட்டத்திற்கு அன்றுகாலை நீர் இறைக்கப்பட்டு நிலம் ஈரமாக இருந் தது. அதைப் பொருட்படுத்தாது மரவள் ளிப் பாத்தியில் குப்புறப் படுத்தார்கள்.

சிறிது நேரத்தில் லப்பாம் தனது வழ மையான குறும்புச் சேட்டையில் இறங்கி விட்டான். மரவள்ளிப் பாத்தியைக் கையால் கிளறத் தொடங்கினுன். எதிர்பாராத வித மாக அவன் கைக்கு கிழங்கு தட்டுப்பட்டது. அவன் இன்னும் ஆழமாகத் தோண்டி கிழங்கை முறித்து எடுத்துத் தின்னத் தொடங்கினுன்.

லப்பாம் கிழங்கு சாப்பிடுவதைப் பார்த்த டப்பாம் சும்மா இருப்பானு? உடனே அவ னும் தன் கைவரிசையைக் காட்டத் தொடங் கினுன்.

டப்பாமின் கைக்குக் கிழங்குக்குப் பதில் விநோதமான பொருள் தட்டுப்பட்டது. மேசைக் கடிகாரம் பொலித்தீன் பையினுல் சுற்றப்பட்டு புதைக்கப்பட்டு இருந்தது.

அதை எடுத்துப் பார்த்த டப்பாமிற்கு அது என்ன பொருள் என்று தெரியவில்லை. ''என்னடா இது'' என்று லப்பாமைக் கேட் டான்.

தோட்டத்தில் ஏதோ பேச்சுக்குரல் கேட்கி றதே என்று எண்ணியபடி வெளியே வந்து பார்த்தான் பியோன் கந்தசாமி. அது அவ னுடைய தோட்டம் வீட்டோடு சேர்ந்து தோட்டம் இருந்தது

அவன் கண்ட காட்சி அவனுக்கு மூச்சே நின்று விடும்போல் இருந்தது. தான் புதைத்து வைத்த கடிகாரத்தை இவர்கள் எப்படி மோப்பம் போட்டுக் கண்டுபிடித்தார் கள் என்று வியந்தவனுய் ''தம்பி தம்பி கொஞ்சம் நில்லுங்கோ'' என்று கெஞ்சியபடி அவர்களை நோக்கிப் போனுன்.

இருவருக்கும் பயம் நெஞ்சைக் கவ்வியது.

''பியோன் அடிக்கப்போருண்டா'' என்று சொன்ன டப்பாம் கடிகாரத்துடன் எடுத் தான் ஓட்டம். அவனைத் தொடர்ந்து லப் பாம் ஓடினுன். கந்தசாமி கெஞ்சினுன். மன் ருடியபடி பின்னுக்கு அவர்களைத் தொடர்ந்து ஓடும்போது ''என்னைக் காப்பாத்துங்கோ'' என்று கெஞ்சினுன்.

கந்தசாமி தங்களைத் துரத்துவதாக எண்ணி அவர்கள் இன்னும் விரைவாக மூச்சு வாங்க ஓடினுர்கள்.

இவர்கள் ஓடிய வேகத்தில் அப்போது தான் பாடசாலையில் இருந்து வந்த தலைமை வாத்தியாரைக் கவனிக்கவில்லை. அவரோடு மோதிய பின்புதான் அவரைக்கவனித்தார்கள்.

(34 ஆம் பக்கம் பார்க்க)

# பொது அறிவு - ஒளியியல்

★ பிரமிட் போன்ற அமைப்பையுடைய கண்ணாடி பிரிசத்தின் வாயிலாக வெள்ளை ஒளிக்கற்றையைப் புகச்செய்தால் ஒளிச் சிதறல் நிகழுமா?

ஆம். சாதாரண பிரிசத்தில் மூன்று முகங்களும், தளத்திற்கு செங்குத்தாக உள்ளன. பிரமிட் அமைப்பில் மூன்று முகங்களும் சாய்ந்து ஒரு உச்சிப் புள்ளியில் சந்திக்கின்றன. இந்தச் சாய்வால் ஒளிக் கற்றையின் சிதறல் அதிகமாகும்.

★ வானவில்லிலுள்ள எத்தனை நிறங்களையுடைய மின்னல்கள் இருப்பதாகக் கூறப்படினும் எதனால் வெண்மை நிறமுள்ள மின்னல்கள் காணப்படுகின்றன?

மின்னூட்டம் பெற்ற துகள்கள் மின்னிறக்கம் பெறுவதால் மின்னல் உண்டாகிறது. மின்னல் உண்டாகும்போது சூரிய ஒளிபோன்ற வெண்மை நிற ஒளி தோன்றுகிறது. இந்த ஒளியில் சூரிய ஒளியில் உள்ளதுபோன்று ஏழு வண்ணங்கள் உள்ளன. மற்றும் எப்படி வானவில்லிலுள்ள அத்தனை நிறங்களையும் ஒன்றுசேர்த்தால் வெண்மை நிறம் தோன்றுகின்றதோ அதுபோல் வானவில்லிலுள்ள அத்தனை நிறங்களையுடைய மின்னலகள் ஒன்றுசேர்ந்து வெண்மை நிறமாகத் தோன்றுகிறது.

★ 10 சென்ரிமீற்றர் குவியத்தூரமுடைய ஒரு குவிவொன்றைப் பயன்படுத்தி ஒரு பொருளின் தெளிவான பிம்பத்தை உண்டாக்குவதற்கு பொருளுக்கும் பிம்பத்திற்கும் இடையில் உள்ள தூரம் குறைந்தது எவ்வளவு இருக்கவேண்டும்?
40 சென்ரிமீற்றர்.

★ வெகுதூரத்தில் இருந்துவரும் ஒளிக்கதிர்களை ஒரு புள்ளியில் குவிப்பதற்கு எவ் ஆடிகள் பயன்படுகின்றன?
பரவளைய வடிவில் அமைந்த ஆடிகள்

★ உருப்பெருக்கும் திறன் அதிகமாக இருக்க வேண்டுமானால் ஒரு உருப்பெருக்கியில் (Mlcroscope) பயன்படுத்தப்படும் லென்சுகளின் குவியத்தூரம் எவ்வாறு இருக்க வேண்டும்?
மிகவும் குறைவாக இருக்கவேண்டும்.

★ ஒரு ஒளி ஆண்டைவிட பெரிய அலகு யாது?
1 பார்செக் (Parsee) = 3 262 ஒளி ஆண்டுகள் = 3080 = 10 ' கிலோமிற்றர்.

★ வாகனத்தில் சிவப்பு / மஞ்சள் விளக்கு பொருத்தப்படுவதேன்?
இவைகளின் அலைநீளம் அதிகமாதலால் ஒளிச்சிதறல் அடையாமல் மழை. மழை

# உங்களுக்குத் தெரியுமா?

★ சூரியனில் இருந்து பூமிக்கு ஒளி அடைய ஆகும் நேரம் என்ன?
சுமார் 8 நிமிடங்கள்.

★ வண்ணக் கண்ணாடிகளைத் தூளாக்கிய பின்பு வெண்மை நிறமாகத் தோன்றுவது ஏன்?
சூரிய ஒளியில் ஏழு நிறங்கள் உண்டு. அவ்வொளி ஒரு பச்சை வண்ணக் கண்ணாடியின் மீது விழுந்தால் அக்கண்ணாடி பச்சை நிறத்தைத் தவிர மற்ற நிறங்களை உட்கொண்டு விடுகிறது.
அதனால்தான் அது பச்சை நிறமாகத் தெரிகிறது.

பனிவேளைகளிலும் நெடுந்தொலைவு வெளிச்சம் தெரியும் தன்மை உடையதேயாகும்.

★ வெற்றிடத்தில் ஒளி அலைகளின் வேகத்தைவிட அதிகமான வேகத்தில் ஒரு பொருள் செல்ல முடியாது என்ற கருத்தைக் கூறிய அறிவியல் அறிஞர் யார்?
விடை; அல்பேட் ஐன்ஸ்டீன்

ஆக்கம்: எஸ். ஆர் பேரின்பநாயகம்

★ ★

## பங்குனி வெய்யில் பார்!

வெய்யில் சுடுகுது ஓடிவா
விரைந்து விரைந்து ஓடிவா
கையைத் தலைமேல் வைத்துவா
காலிற் செருப்பை மாட்டிவா

நிழலை நாடி ஓடிவா
நேரம் போகுது ஓடிவா
வழியைப் பார்த்தே ஓடிவா
வாதைப் படாமல் ஓடிவா

பங்குனி மாத வெய்யில்பார்
பகலில் பயணம் பண்ணாதே
எங்குநீ போக நேர்ந்தாலும்
ஏறிப் போவாய் வண்டியில்

கவிஞர் அரியாலையூர்
வே. ஐயாத்துரை

## மாணவர் கையெழுத்து ஏடுகள் ஓர் அறிமுகம்

இன்று பாடசாலைகளில் கையெழுத்துச் சஞ்சிகை வெளியீடு முதன்மை பெற்றுவருகின்றது. பாடசாலைக் கையெழுத்துச் சஞ்சிகை அறிமுகப் பகுதியில் இடம் பெற விரும்புவோர் தமது கையெழுத்துச் சஞ்சிகைகளை அர்ச்சுனாவுக்கு அனுப்பி வைக்கலாம் மதிப்பீடு முடிந்த பின் ஏடுகள் பாடசாலைகளுக்கு மீள அனுப்பிவைக்கப்படும்.

- ஆசிரியர் -

## எங்குமுள்ள இறைவன்

நாமி ருப்போம் வீட்டிலே
வீடிருக்கும் தெருவிலே
தெருவிருக்கும் ஊரிலே
ஊரிருக்கும் நாட்டிலே
நாடி ருக்குங் கண்டத்தில்
கண்டமுண்டாம் பூமியில்
பூமியுண்டாம் அண்டத்தில்
அண்டம் கோடி அண்டமாம்
அங்கு மெங்கு மிறைவனும்
அருளிச் செய்யும் நிறைவனும்.

ச. வே. பஞ்சாட்சரம்

## அர்ச்சுனா சிறுவர் நூலகம்

அர்ச்சுனா சிறுவர் நூலகம் என்ற பகுதியில் நூல் அறிமுகம் இடம் பெற வேண்டும் என விரும்பும் சிறுவர் இலக்கிய நூலாசிரியர்களும் வெளியீட்டாளர்களும் தமது நூல்களில் இரண்டு பிரதிகளை அனுப்பி வைக்கவும்.

- ஆசிரியர் -

# ஒரு பனிப் புறு இரு கரடிக் குட்டிகள்

பனிப்புரு ஒரு பெரிய பறவை. அது, உயர்ந்த மரம் ஒன்றின் பதிந்த கிளையில், கீழே பார்த்தபடி இருந்தது. கீழே தரையில், இரு கரடிக்குட்டிகள் சொரிந்த இலைப் படுக்கையில் குதித்து விளையாடின. அப்படி விளையாடுகையில், ஒரு குட்டி மரக்கிளையில் முட்டிய போது கிளை மேலும் கீழுமாக ஆடிற்று.

''வெட்கமில்லையா உங்களுக்கு? நீங்கள் இரண்டு பேரும் காடையர்களேயல்லாமல் வேறில்லை'' என்று சத்தமிட்டது பனிப்புரு.

''மன்னிக்கவும் மாமி! நாங்கள் இனிமேல் அப்படிச் செய்யமாட்டோம் நாங்கள் காடையருமில்லை சும்மா விளையாடுகிறேம், மகிழ்ச்சியாக'' என்றது ஒரு குட்டி.

''என்ன அவ்வளவு மகிழ்ச்சி?'' என்று கேட்டது பனிப்புரு.

அவற்றைப் பிடித்து உண்போம்'' என்றன கரடிகள் இரண்டும்,

''அவற்றைப் பிடிக்கலாம் என்று நினைக்கிறீர்கள்? கோடை வந்துவிடும் ஆறு காய்ந்து வரண்டு விடும் ஒரு வால்பேத்தைகூட இருக்காது மீன் பிடிப்பான்களாம்......மீன்......''

'அப்போது காடெல்லாம் பெரிய பழங்கள் குலைகுலையாய்த் தொங்கும். நாங்கள் அவற்றைப் பறித்து உண்போம்.

''பகல் கனவு காண்கிறீர்கள். உங்களால் முடிந்தது அது தான் இலையுதிர் காலம் வரும். பெரிகள் எங்குமே இருக்காது.''

'' குட்டிகள் ஒன்றையொன்று பார்த்தன. ஏதோ ரகசியம் பேசின. பின் மரக்கிளையைப் பிடித்து, தம் பலமெல்லாம் சேர்த்து உலுப்பின.

''ஏனெனில், எங்களைச் சுற்றி யாவும் மஞ்சள், சிவப்பு, பச்சை ........எல்லாம் மிக அழகாக உள்ளன. என்றது ஒன்று

''அது என்ன வகை மகிழ்ச்சி?'' என்று கேட்ட பனிப்புரு, ''கெதியில் பனி கொட்டும், எங்கும் பனிப்படலம் முட்டும்........ அப்போது உங்கள் மஞ்சளும், பச்சையும் என்னவாகும்?'' என்று புறுபுறுத்தது புரு,

''அச்சா அப்படியென்றல் நாங்கள் பனிக் கட்டியில் விழுந்து புரளுவோம். பனி மலையில் சறுக்கி விளையாடுவோம்.''

''ஓ! அப்படியா? பிறகு வசந்தம் வரும் பனி உருகும் எங்கும் சேறும் சுரியும்........

''அதுதான் எங்களுக்கு மிகவும் விருப்பமாயிற்றே! ஆற்றில் மீன்கள் வரும். நாங்கள்

பனிப்புருவினுல் தாக்குப் பிடிக்க முடியவில்லை. தடம்புரண்டு, தன் பெரிய சிறகுகளை விரித்து பறந்து ஓடி மறைந்தது.

**எஸ். பீ. கே.**

''போகட்டும்! அவள் இல்லாவிட்டால் நாங்கள் சந்தோசமாக இருக்கலாம்'' என்றது ஒரு கரடிக் குட்டி.

நன்றி

**(சோவியத் வுமன்)**

# பாசம்

— ஆழ்கடலான்

**“பாவம் பிளசம் சாப்பிடாமல் நான் எப்படிச் சாப்பிடுவது? நான் ஆஸ்பத்திரியில் இருக்கும்போது அது சாப்பிடவில்லை. நான் மனிதன் அது மிருகம். நான் பேசும் பிராணி அது பேசாத பிராணி. மிருகமே என்னிடம் அன்பு காட்டியது” என்முன் சுதா.**

சுதாகரன் சுறுசுறுப்பான பிள்ளை செல்லப்பிராணிகளில் அவனுக்குப் பிரியம். நாய், பூனை, ஆடு, கோழி, குருவிகளை அன்போடு காப்பான். ஒரு நாள் அவன் வீட்டின் முன்னே, வீதியில் நின்முன். ஒருவர் சயிக்கிளில் ஆட்டுக்குட்டி ஒன்றை பெட்டியில் வைத்துக் கட்டிச் செல்வதைக் கண்டான். தன் அப்பாவிடம் அக்குட்டியை வேண்டித் தரும்படிகேட்டான். அப்பாவும் இறைச்சிக் கடைக்குப் போன குட்டியைப் பணங் கொடுத்து வேண்டிக் கொடுத்தார். அவனும் ஆசையோடு வளர்த்தான். அவனுடைய அம்மா மல்லிகா. அவனை சுதா என்று செல்லமாக கூப்பிடுவா. எனவே எல்லாருமப் படித்தான் அழைப்பார்கள்.

அவன் ஐந்தாம் ஆண்டிற் படிக்கிமுன். வகுப்பிலும் சுதாகரனின் பெயர் சுதா என இரண்டெழுத்துப் பெயராய் விட்டது. அவன் வீட்டில் பூனை, நாய், கோழி, ஆடு, வடிவான குருவிகள். எல்லாம் அவன் வளர்க்கும் பிராணிகள். இன்னொருநாள், அப்பாவுடன் சந்தைக்குப் போனுன் அங்கே ஒரு சேவல் புதுமாதிரியான கொண்டையுடன், விற்சக் கொண்டு வந்திருந்தார்கள். அப்பாவை நச்சரித்து அதையும் வேண்டிக் கொண்டான். இப்படி அவன் குடும்பம் வளர்ந்து கொண்டது.

அவன் பாடசாலை போகமுன் உணவு வைப்பான் கோழிக்கும் குருவிகளுக்கும் தண்ணீரும் வைத்துவிட்டுத் தான் பாடசாலை போவான். பாடசாலை விட்டு வந்ததும் வரா




ததுமாய் முதல் வேலையாக அப்பிராணிகளை கவனித்த பின், தான் கைகால் கழுவி கடவுளை வணங்கிக் கொண்டு சாப்பிடுவான் தான் என்ன சாப்பிட்டாலும் அவற்றுக்குங் கொடுப்பான்.

அவன் வளர்த்த செல்ல நாய்க்குட்டிக்கு பிளசம் என்று பெயர் வைத்து கூப்பிடுவான் எடுத்து கொஞ்சுவான். தடவுவான், உண்ணி, தெள்ளு வராமற் காப்பான். குளிக்கவும் வார்ப்பான். சிலவேளை படுக்கையிலும் கூட வைத்திருப்பான். நாட்கள் பல ஓடின. மாதங்கள் சில செல்ல குட்டி கொளு, கொளு என்று வளர்ந்து பெருத்து நாயாகி விட்டது. எந்நேரமும் பிளசம் கூடவே சுற்றும் அவனை. அவனுக்கு ஒருமுறை காய்ச்சல் வந்து ஆஸ்பத்திரியில் இருந்தான் அவன் 2நாள் இருந்தானங்கே இரண்டு நாளும் எஜமானில்லாமல் நாய் சாப்பிடவில்லை. அவன் வந்தபின் வாலை ஆட்டிக் கொண்டு சாப்பிட்டது. இப்படியவன் நாயோடு மட்டுமல்ல எல்லாருடனும் பட்சமாய் இருப்பான்.

ஒருதினம் பாடசாலைக்குப் போய்விட்டான். கேற் திறந்திருந்தது பிளசம் ரோட்டுக்குப் போய், குறுக்கே போனது வேகமாக வந்த மோட்டார் சைக்கிள் சில்லுக் கம்பிக்குள் சிக்கிக் கொண்டது. சத்தம் கேட்டு அவனுடைய அப்பா

(26 ஆம் பக்கம் பார்க்க)

ஆண்டு 1965 மாதம் ஜீமன்

வானில் ஒருகலம் அதிவேகத்தில் பூமியின் வாயுமண்டலத்தைக் கிழித்துக்கொண்டு செல்கின்றது. கலம் ஜெமினி.4 என்ற பெயருடையது. அமெரிக்காவினுல் ஏவப்பட்டது. அங்கே ஆனந்தமாக ஒருவர் இருக்கிருர். அவர் யார் தெரியுமா ஜீன் மக்ரிவிற் என்ற வீரர். விண்ணில் சஞ்சரிப்பதற்காகச் செல்கின்ருர். வானில் உலவும் உருவங்களை ஆராயச் செல்கிருர்.

திடீரென ஒரு கோல் வடிவ உருவம், தலையில் நீட்டப்பட்ட இரு கம்பிகள். இது என்ன? என ஜின் உற்றுப்பார்த்தார் அதற்குள் அவரது விண்கலத்தை நோக்கி விரைந்து வந்தது. ஜின் 'பதட்டமடைந்தார். கைகால்கள் இயங்கமறுத்தன. மிக அண்மையில் மிக அண்மையில், இத்துடன் தன்வாழ்வு முடிந்தது என ஜின் நினைத்தார்.

சீராக கலத்தின் நிலையைப்படமாக்கி கிறிஸ்தோபருக்கு காட்டிக் கொண்டிருந்தது.

திடீரென கிறிஸ்தோபர் பதட்டமடைந்து விண் வீரர்களை எழுப்பினுர். ஏதோ பயந்ததொனியில் மாறி மாறி சம்பாஷணைகள். அதுவருமாறு.-

வீரர்களே, கொஞ்சங் கவனியுங்கள் தற்போது தங்களருகே ஒரு பொருள் தென்படுவதை ராடர்காட்டுகின்றது. இது உங்களிடமிருந்து நான்காயிரம் மீற்றர் தொலைவிலிருக்கலாம் எனக்கணிப்பிடப்பட்டுள்ளது. ஒருதடவை வெளியே உங்கள் கண்களை செலுத்திப் பாருங்கள்.

எதுவும் தெரியவில்லை

இல்லை இல்லை ராடர் தற்போதும் காட்டுகின்றது. அது உங்கள் கலத்தின் வலப்புறமாக தெரிகின்றது.

# வியக்க வைக்கும் பறக்கும் தட்டு-3

கலத்தை நோக்கி விரைந்த அப்பொருள் திடீரென திசைமாறிவிட்டது. பதட்டம் தணிந்தது ஜின் ஆண்டவனிற்கு நன்றி கூறிவிட்டு உடனே தொலைத்தகவல் கருவியை இயக்கி பூமியின் கட்டுப்பாட்டுத்தளத்திற்கு தகவலனுப்பினுர். இதன்பின் ஆய்வைமுடித்துவிட்டு பூமிக்குத் திரும்பும் வரை அது இவரது கண்ணிற்கு தென்படவில்லை.

1965 ஒகஸ்ட் 24ம் திகதி இக்கலம் புறப்பட்ட மூன்றுநாட்கள் பூமியைச் சுற்றிக் கொண்டிருந்தது இப்போது இவர்கள் தம் தாய்நாடான அமெரிக்கா மீது அவர்கள் புறப்பட்ட புளோரிடாவிலுள்ள கேப் கென்னடி தளத்தின் மேலே பறந்துகொண்டிருந்தனர். கீழே கென்னடித் தளத்தில் ராடார் தரும் தகவலை பார்த்தபடி விண்தள இயக்குனர் டாக்டர் கிறிஸ்தோபர் கிராபற். மேலே கலத்தில் 'லீரோய் காடன் கூப்பர், சார்ள்ஸ் சொன்ராட் ஆகிய இருவரும் கீழே ராடர்

''எதுவுமே தெரியவில்லை.

இல்லை இப்போதும் தெரிகின்றது. நன்ருக உற்றுப்பாருங்கள்; தற்போது கலம் எங்கள் அலைகள் எல்லையைக் கடக்கின்றது 'அவுஸ்திரேலியாவிலுள்ள அடுத்த நிலையத்துடன் தொடர்பு கொள்ளுங்கள்.


தகவல் அறுந்தது.

## ககாரின்

அவுதிஸ்ரேலியாவின் 'கானர்வொன்' விண் வெளித்தகவல் தளம். அங்கும் நிபுணர்கள் ராடரில் அந்தப் பொருளைப் பார்க்கின்றனர். ஆனுல் இறுதிவரை விண்வெளி வீரருக்கு அது தென்படவே இல்லை. ராடரில் தெரிந்தது நேரில் கண்ணில் தெரியாத மர்மம்தான் என்ன? தொடரும் விண்வெளியில் பறக்கும்தட்டுகளைப் பார்ப்

போம்... மீண்டும் ஜெமினி – 7 கலம் அதில் போமன் ஜேம்ஸ், ஏ. லொவல் என்ற அமெரிக்க வீரர்கள். இவர்களது பயணத்தின் மூன்றும் நாள் ராடரில் எதுவுமே தெரியவில்லை. ஆனுல் இவர்களது கண்ணிற்கு தட்டு வடிவப் பொருள் ஒன்று தெரிந்தது? இதன் மர்மம் என்ன?

தொடர்ந்து ஜெமினி – 10, ஜெமினி–11, ஜெமினி – 12 கலங்களில் சென்ற வீரர்கள் அந்தப் பறக்கும் பொருளை பார்த்ததாக கூறினர். ஆனுல் இதுபற்றி தீர்க்கமான முடிவும் எடுக்கப்படவில்லை. இதைவிட சந்திரனில் முதன் முதல் கால்வைத்த மனிதர்களான, நீல் ஆம்ஸ்ரோங், எட்வின் இ ஆல்ட்ரின், மைக்கல் கொலின்ஸ் ஆகியோரும் தம் வழியில் இந்த பறக்கும் மர்மப் பொருளைப் பார்த்தனராம்.



இதற்கு ஒருசில விஞ்ஞானிகள் கூறும் காரணம் என்ன தெரியுமா?

'வானில் உலவும் பழுதடைந்த செய்மதிகளும் ரொக்கட்டுகளுமே சூரிய வெளிச்சத்தால் இவ்வாறு தோன்றின', எனக் கூறினர். பின்னர் ஏன் ராடரில் தெரிந்த பொருள் விண்வெளி வீரருக்கு தென்படவில்லை. வீரருக்கு தோற்றியது ராடரில் தெரியவில்லை?'

இது சில விஞ்ஞானிகளின் கேள்வி. இனி கொஞ்சம் பறக்கும் தட்டு தகவல்கள்...

● 1977 ஆம் ஆண்டு இத்தாலி நாட்டின் கிராமமொன்றில், ஏழு கிராமியர் ஒரு பறக்கும் தட்டையும், எட்டு அடி உயர உருவத்தையும் கண்டனர்.

● கலிபோர்னியா மாநிலத்தைச் சார்ந்த 'பிரெய்ன் ஸ்கொட்' என்பவர் நான்கு தடவை பறக்கும் தட்டுகளால் கடத்தப்பட்டார்.

● ஆண்டு 1957. ஒரு இராணுவ அதிகாரி வானில் செல்லும் போர் விமானமொன்றை பார்த்தவாறு நிற்கின்ருர். திடீரென எங்கிருந்தோ வந்த கலம் ஒன்று விமானத்தை மோதி அடித்துவிட்டு சென்றுவிட்டது. விமானம் உடைந்து கடலில் வீழ்ந்தது.

● சேர். பேர்ஞட் லொவல் என்பவர் பிரித்தானியாவின் சிறந்த பௌதீகவியலாளர், வானவியலறிஞர். இவர் அடிக்கடி தொலை நோக்கியால் வானை ஆய்வார். அவர் அப்படிப் பார்க்கையில் தொடர்ந்து 30 நாட்கள் 'ஜொட்ரல் ஆற்றங்கரையில் ஒரு பறக்கும் தட்டு வஸ்துவை கண்டனராம். அது பற்றி ஆய்கையில் அது எங்கிருந்து வருகின்ற தென்றே அதுபற்றிய எந்த தகவல்களும் கிடைக்கவில்லை.

● 19–ம் நூற்ருண்டில் சில கலங்கள். 1864 அக்டோபர் மாதம் [பிரான்சின் தலைநகர் பாரிஸின் மேலே உருளைவடிவக் கலமொன்றை, பிரான்சிய வானியலறிஞர் 'லெவரீரியர்' கண்டார். சிலர் இதனை வானில் வெடித்த ரொக்கட்களாக இருக்கலாம் என்றனர். ஆனுல் ரொக்கட்கள் அதிகளவு ஒளியை வெளிவிடாது. ஆகவே ரொக்கட்கள் என்ற சிலரது கருத்துகள் புறக்கணிக்கப்பட்டன.

● 1882 ஆம் ஆண்டு நவம்பர் மாதம். தட்டை வடிவக் கலம் ஒன்றைக் கண்டதாக தகவல் பதிவானது. இது பிரித்தானியாவின் கிரீன்விச் நகரிலே தென்பட்டதாம்.

● 1947–ல் அமெரிக்க வியாபாரி 'கென்னத் அர்னேல்ட்' தனது தனி விமானத்தில் வாஷிங்டனை நோக்கிப் பறக்கின்ருர். மௌண்ட் ரேனியர் என்ற இடத்தின் அருகில் அடுத்தடுத்த ஒன்பது ஒளிர் தட்டுகள் பறந்து செல்வதைக் கண்டார். அவரது விமானி 'அர்னேல்ட்' தந்த தகவலின்படி அவற்றின் வேகம் 1200 மைல்/மணியாக இருக்குமாம்.

(தொடரும்

★ ★

# யாழ்ப்பாணத்தில் ஒரு சவர்க்கார ஆலை -II

## ஆலைகள் செல்வோம்

"சவர்க்காரம் செய்வது எப்படி?" நாம் கேட்க இரசாயன ஆலோசகர் தொடங்குகிறார்.

"முதலில் தேங்காய் நெய் பாரிய வெள்ளிநிறக் கொள்கலனில் ஊற்றப்பட்டு, கொதிநீராவி மூலம் சூடாக்கப்படும் இதனை நேரடியாக தீயினால் சூடாக்கினால், வெடித்தல் தீப்பற்றல் முதலிய அபாயங்களுக்கு இடமுண்டு மேலும் இக்கொள்கலன் வெள்ளி நிறத்தில் விளங்குவதற்கான முதன்மைக் காரணம், கதிர்வீசலினாலான வெப்ப இழப்பைத் தடுப்பதற்காகும். கொள்கலனின் வெளிப்புறத்தே பொருத்தப்பட்டுள்ள வெப்பமானி 60oCஐக் காட்டும்போது, கொள்கலனின் மேற்பகுதியிலுள்ள முள்ளிப் புனல் போன்ற அமைப்பினூடாக, தன்னீர்ப்புத் துணியப்பட்ட NaOH கொள்கலனுள் செலுத்தப்படும்.

"மீண்டும், வெப்பநிலை 318.4 பாகைC ஆகும் வரை, வெப்பமாக்குதல் நடைபெறும். இவ்வெப்பநிலையிலேயே திண்ம NaOH, உருகிய நிலையை அடைந்து தே. எண்ணெயுடன் கலக்கக் கூடியதாக இருக்கும். இச் செயற்பாடு அரை மணி நேரத்திற்குத் தொடர்ந்து நடைபெறும் பின் சற்று நேரத்தில், சவர்க்காரத்தின் ஆரம்பக் களியொன்று தயாராகிவிடும்" என்று கூறி நிறுத்தினர்.

தென்னை மரங்கள் வளரக் கூடிய அயன வலய (வெப்பவலய) நாடுகளில் தேங்காய் நெய் போதியளவு கிடைக்கக்கூடியதாயிருக்கும். ஆனல் குளிர்வலய நாடுகளில் தென்னை மரங்கள் இல்லாதபோது, தேங்காய் நெய்யிற்கு எங்கே ஐரோப்பியர் போவார்கள் என்ற நியாயமான சந்தேகம் எம்மனதில் எழவே, அதனைத் திரு தவகோபாலை கேட்டும் விட்டோம்.

"தேங்காய் நெய் கிடைக்காத மேற்கு நாடுகளில் இறைச்சிக்காக வெட்டப்படும் ஆடு அல்லது மாட்டுக் கொழுப்பை சேகரித்து வைத்துக், கொதிநீரில் கலக்கி, இழையங்களையும் சவ்வுகளையும் நீக்கி, காரிக்கன் துணியால் வடிகட்டி எடுக்கப்படும், 'தலோ' எனப்படும் பொருளே, சவர்க்காரத் தயாரிப்பின் பிரதான கச்சாப் பொருளாக உபயோகிக்கப்படுகிறது. அமெரிக்காவிலும் அவுஸ்திரேலியாவிலும் 'லாட்டு' எனப்படும் பன்றிக் கொழுப்பின் வடித்தெடுப்பு உபயோகிக்கப்படுகிறது"

"ஆனல், முஸ்லிம் நாடுகளிலோ, மிருகக் கொழுப்பு விரும்பப்படாததால், ஒலிவ், சூரிய காந்தி முதலியவற்றின் தாவர எண்ணெய்கள் உபயோகிக்கப்படுகின்றன." என்றார்.

"வெப்பக் கொள்கலனில் இருந்து இறக்கப்பட்ட சவர்க்காரக்களி, 'Crucher' எனப்படும் வேறொரு தொட்டிக்கு மாற்றப்படும். இதில் வைத்து, முன்னரே துணியப்பட்ட ஒரு விகிதத்தில், செயற்கைவர்ணம் கூட்டுடனேயே கலக்கப்பட்டு போதிய அளவு ஆறியதும், இறுகுவதற்கும் முன்னரான ஒரு பதத்தில் வாசனைப் பதார்த்தமான சித்திரநெல்லா எண்ணெய் கலக்கப்படும்.

வீ. எஸ். சர்வானந்தர்

பின்னர் அக்களி, ஒரு மீற்றர் நீளமும் 1½ அடி அகலமும் 3 அடி உயரமும் கொண்ட தகரங்களால் அடைக்கப்பட்ட தற்காலிகக் கொள்கலனுள் விடப்பட்டுக் காற்றோட்டமான இடத்தில் 3 நாட்களுக்குக் குறையாது உலர விடப்படும்.

போதிய கால அவகாசத்தின் பின்னர், தகடுகள் சழற்றப்பட்டு, தகரக் கொள்கலத்தின் வடிவத்திலேயே அமைந்த பாரிய சவர்க்காரப் பாளங்கள் பெறப்படும்.

"இராவணன், கும்பகர்ணன் முதலிய இராட்சதர்கள், உடுப்பு துவைக்க பாவிக்கும் சோப் கட்டிகளின் அளவு இது தான்" தவகோபால் சற்றே ஜோக்கடித்தார்.

"இந்த சோப் பாளம் ஒன்றிலிருந்து நமது பாவனைக்கேற்ற அளவுள்ள சோப் கட்டிகளை எத்தனை வெட்டலாம்"? இது நாம்.

"2888 ஒழுங்கான கட்டிகளும், எஞ்சிய வெட்டுத்துண்டுகளை மீளவும் தூளாக்கி, சலவைப்பவுடர் என்ற பெயருடன் பலவேறு அளவுகளில் பொதி செய்யப்பட்டு, விற்பனைக்கு அனுப்பப்படும்" என்று பதிலளித்தார்.



தயாரான சவர்க்காரங்கள் உறைகள் அகற்றப்பட்டு பெட்டிகளில் அடைத்து வைக்கப்பட்டு களஞ்சியப்படுத்தப்படும் விரபனைக்குத் தேவையான போது, விநியோக வண்டிகளுக்கு அவை மாற்றப்பட்டு, விற்பனைப் பிரதிநிதிகளால் நாட்டின் பல பாகங்களிலுமுள்ள சில்லறைக் கடைகளுக்கு விநியோகிக்கப்படும்.

நேரம் மதியம் ஒரு மணியைத் தாண்டவே, பசிவயிற்றைக் கிள்ளியது தவகோபால் அவர்களும் தாபனத்தின் தொழிலதிபர் அவர்களும் தந்த ஒத்துழைப்புக்கு நன்றி தெரிவித்துவிட்டு, ஆலையின் வெளிவாயிலை நோக்கி நடையைக் கட்டினோம்.

(முற்றும்)

## சவர்க்காரத் தயாரிப்புப் பற்றிய மேலதிக குறிப்புகள்

★ யாழ்ப்பாணத்தில் தயாரிக்கப்படுபவை யாவும், சலவைக்குரிய வன் சவர்க்காரங்களாகும். எமது உடற் சுத்திக்குப் பாவிக்கும் மென்சவர்க்காரங்களை ஆக்குவதற்கு NaOH க்குப் பதிலாக, பொட்டாசியம் ஐதரொட்சைட்டு (KOH) பாவித்துக் கொழுப்பு நீர்ப்பகுக்கப்படவேண்டும்

★ சவர்க்காரத்தயாரிப்பில் பக்க விளைவாக உருவாகும் கிளிசரோல், வேறுக்கப்பட்டுத் தனி வாணிபமாகவே செய்யப்படலாம். இது வெடிகுண்டுகளின் தயாரிப்பில் பயன்படும் கிளிசரீனின் முதற் பொருளாகும்.

★ சுகாதார சவர்க்காரங்கள் (Medicated Scaps) தயாரிக்கும் போது காபோலிக்கு (Carbolic Acid) அமிலமும் சேர்க்கப்படும்.

★ சவர்க்காரக்களியைத் தாய்த் திரவத்திலிருந்து பிரித்தெடுப்பதற்கும், தொடர்ந்து வீழ்படிவாக்கல் முறையால் வடித்தெடுப்பதற்கும் கறியுப்பு (NaCl) உபயோகிக்கப்படலாம்.

★ சில சவர்க்காரங்களின் சேதனச் சூத்திரம் வருமாறு

$C_{19}H_{35}COONa$ -
சோடியத்தியரேற்று

$C_{15}H_{31}COONa$ -
சோடியம் பாமிந்நேற்று

$C_{17}H_{33}COONa$ -
சோடியம் ஒலியேற்று

(மேற் சொன்ன குறிப்புகள் கா. பொ. த உ/த பாடவிதானத் திற்கமைவானவை.)



# பல்துறை ஆட்டக்காரர் கபில்தேவ்

இந்திய அணியின் காப்டன்,
இந்திய அணியின் முதுகெலும்பு,
சிறந்த பல்துறை ஆட்டக்காரர்.


இதற்கெல்லாம் இலக்கணமானவர் தற்போது இந்திய அணியின் சிறந்த ஆட்டக்காரராக உள்ள, முன்பு கப்டனாக இருந்த கபில்தேவ். இவர் 1959ல் ஜனவரி 6ம் தேதி இந்தியாவின் சண்டிகாரில் பிறந்தார்.

இன்று இவர் சிறந்த ஆட்டக்காரர். ஆனால் இவர் தனது 13 வயது வரை கிரிக்கட் மட்டையையே தொட்டதில்லை. சண்டிகாரில் சில குழுக்களுக்கிடையே நடைபெறும் கிரிக்கட் போட்டியில் ஆட்பற்றாக்குறையினால் ஒரு அணியில் தற்செயலாக சேர்க்கப்பட்டவரே கபில்தேவ்.

அதுவரை கிரிக்கட் மட்டையையே தொடாத கபில் தனது முதலாவது ஆட்டத்தில் திறமையாக ஆடி பலரையும் கவர்ந்தார் இந்த ஆட்டம் முதல் கபில் கிரிக்கட்டில் அக்கறை கொண்டார் அதற்கு ஊக்கம் கொடுத்தார் இவர் சகோதரர் பூஷண் நிகாஞ்ச் அனுமதிக்கப்பட்ட கிரிக்கட் குழுவில் கபில் ஆடிய முதல் ஆட்டம் தனது 14வது வயதில் தான் கற்றுக்கொண்டிருந்த ரிவிஏ பாடசாலை சார்பில் ஆடியதாகும். அப்போது ஒரு ஆசிரியர் ''கபில் என்றாவது ஒரு நாள் சிறந்த கிரிக்கட் ஆட்டக்காரனாவான்''. என்று கூறினார். அது போல் ஆகியும் விட்டார் கபில். இவருக்கு கிரிக்கட் பயிற்சியாளராக இருந்தவர் 'டி.பி ஆசாத் என்பவராவார். பயிற்சியில் அதிக கட்டுப்பாடுடைய இவரிடம் பொறுமையாக கிரிக்கட் வித்தைகளை கற்றார் கபில்.

ஒரு வருடம் ஆசாத்திடம் பயிற்சி பெற்றார். தனது 15வது வயதில் கபில் இந்திய கிரிக்கட் சபையின் பயிற்சி முகாமில் சேர்ந்தார். அங்கு சிறந்த டெஸ்ட் கிரிக்கட் ஆட்டக்காரரான 'ஹேமு அடிகாரி, பயிற்சி அளித்தார். இங்கு கபில் சிறந்த பயிற்சி பெற்றார் பட்டினியும் கிடந்தார். ஆம் இப்பயிற்சிப் பள்ளியில் கடுமையான உணவுக்கட்டுப்பாடு.

யானைப்பசிக்கு சோளப்பொரி என்பது போல் பயிற்சியினால் களைத்த கபிலுக்கு கிடைப்பது இரு காய்ந்த சப்பாத்திகளும்' சிறிதளவு கறியுமே.



ஆனாலும் தான் சிறந்த ஆட்டக்காரனாக வரவேண்டுமென்ற ஆர்வ உந்தலால் பட்டினியை மறந்தார். பயிற்சி நேரத்தில் ''தன்னைச் சிறந்த வேகப்பந்து வீச்சாளன்'' எனக் கூறிக் கொள்வார். அதற்கேற்ப வேகமாக பந்து வீசினார். ஆனால் அவரைப் பலர் கேலியும் கிண்டலும் அடித்தார்கள். இந்தக் கேலியும் கிண்டலுமே கபிலின் தற்போதைய நிலைக்கு உரமாயிற்று. கபில் தனது 17 வது வயதில் தன் சொந்த இடமான சண்டிகாரின் மாநில அணியில் ஆடினார்.

ஆண்டு, 1978, இந்தியாவிற்கும் பாகிஸ்தானுக்கும் எதிரான கிரிக்கட் ஆட்டம் இதில் தான் கபில்தேவ் முதல் முதலாக சர்வதேச ரீதியில் விளையாடினார். இவர்

ஆடிய இது முதல் ஆட்டமே. ஆனால் பாகிஸ்தான் பத்திரிகைகள் இந்தியாவின் சிறந்த வேகப்பந்து வீச்சாளர் கபில்தேவை பாகிஸ்தான் அணி எப்படிச் சமாளிக்கப் போகின்றது எனப் புகழ்ந்தன. இதில் கபில்தேவ் சிறப்பாகவே பந்துவீசினார். ஆனால் 8ஓட்டங்களையே எடுத்தார்.

ஆனாலும் சளைக்காது கிரிக்கட் ஆடினார். இரண்டாவதாக நடந்த டெஸ்ட் ஆட்டம் லாகூரில் நடந்தது 3வது டெஸ்ட் கராச்சியில் நடந்தது. இதில் முதல் இனிங்சில் 59 ஓட்டங்களும், இரண்டாவது இனிங்சில் 38 ஓட்டங்களும் எடுத்தார்.



உலகின் அதிவேகப்பந்து வீச்சாளர் சிறந்த ஆட்டக்காரர் பாகிஸ்தான் கப்டன் இம்ரான்கான் கபிலின் ஆரம்ப ஆட்டங்களில் ஒரு ஆட்டம் கபில் துடுப்பெடுத்து ஆடுகிறார் எப்படி? வேகப்பந்து வீச்சாளர் இம்ரான்கானின் பந்து வீச்சுக்களுக்கு ஏற்ப ஆடுகிறார் அதில் இம்ரான்கானைவிட 8 ஓட்டங்கள் அதிகமாகப் பெற்று பலரது பாராட்டுகளுக்கு உரியவரானார். இவ்வாறு கிரிக்கட் ஆட்டத்தில் சிறப்பாகக் கொண்டு வந்தார் இந்திய அணியின் முன்னாள் வீரர் ராஜித்தர் போலிடம் பயிற்சி பெற்று தன் பந்துவீச்சுத் திறனை மிகைப் படுத்தினார் கபில்

கபில்தேவின் ஆட்டவிபரம் (1988 டிசெம்பர் 31 வரை):

ஒருநாள் ஆட்டத்தில் எடுத்த அதிகூடிய ஓட்டங்கள் 175. ஆட்டமிழக்காது சிம்பாவேக்கு எதிராக எடுத்த ஓட்டமிது.

கப்டனாகவிருந்து 34 டெஸ்ட் ஆட்டங்களில் ஆடி 1364 ஓட்டங்களை ஈட்டினார்.

1119·4 ஓவர்கள் பந்துவீசி 2925 ஓட்டங்களைக் கொடுத்து 111 விக்கட்களை ஈட்டினார்.

கப்டனாக இல்லாமல் சாதாரண வீரராக இருந்து 61 டெஸ்ட்களில் ஆடி 2632 ஓட்டங்களை எடுத்தார்.

2173.4 ஓவர்கள் பந்துவீசி 6761 ஓட்டங்களைக் கொடுத்து 218 விக்கட்களை கைப்பற்றினார்.

இங்கிலாந்திற்கு எதிராக 21 டெஸ்ட்களில் ஆடி 1034 ஓட்டங்களை எடுத்தார். 1 செஞ்சரியும் 6 தடவை 50 ஓட்டங்களை எடுத்தார். 877.5 ஓவர்கள் பந்து வீசி 2596 ஓட்டங்களை கொடுத்து 71 விக்கட்களை கைப்பற்றினார்

அவுஸ்திரேலியாவிற்கு எதிராக 15 டெஸ்ட்களில் ஆடி 522 ஓட்டங்களை ஈட்டினார். அதிகபட்சமாக 119 ஓட்டங்களை எடுத்தார். 1 செஞ்சரியும் 2 தடவை 50 ஓட்டங்களும் எடுத்தார்.

507.0 ஓவர்கள் பந்து வீசி 1358 ஓட்டங்களை கொடுத்து 54 விக்கட்களை கைப்பற்றினார்.

மேற்கிந்திய அணிக்கு எதிராக 21 டெஸ்ட்களில் ஆடி 9ƨ8 ஓட்டங்களை எடுத்தார். அதிகபட்சம் 126 ஓட்டங்கள். மூன்றுதடவை செஞ்சரிகளும் 4 தடவை 50களும் எடுத்தார். 626.2 ஓவர்கள் பந்துவீசி 1831 ஓட்டங்களை கொடுத்து 71 விக்கட்களை கைப்பற்றினார்.

நியூசிலாந்திற்கு எதிராக 6 டெஸ்களில் ஆடி 134 ஓட்டங்களை எடுத்தார். அதிகபட் 40 ஓட்டங்களை, 195·0 ஓவர்கள் பந்துவீசி 487 ஓட்டங்களை கொடுத்து 18 விக்கட்களை கைப்பற்றினார்.

பாகிஸ்தானுடன் 25 டெஸ்ட்களில் ஆட் 895 ஓட்டங்களை எடுத்தார். அதிகபட்ச ஓட்டங்கள் 84. 7 தடவை 50 ஓட்டங்களை எடுத்தார். 822..1 ஓவர்கள் பந்துவீசி 2604 ஓடிடங்களை கொடுத்து 87 விக்கட்களை எடுத்தார்.

இலங்கைக்கு எதிராக 7 டெஸ்ட்களில் ஆடி 423 ஓட்டங்களை எடுத்தார். அதிகபட்சமாக 163 ஓட்டங்களை எடுத்தார். 2650 ஓவர்கள் பந்துவீசி 810 ஓட்டங்களை கொடுத்து 28 விக்கட்களை கைப்பற்றினார். இலங்கைக்கு எதிராக ஆடிய ஆட்டங்களில் ஒரு தடவை 100 ஓட்டமும், 2 தடவை 50 ஓட்டங்களையும் எடுத்தார்.

# குழப்படி மன்னன் ரொம்

புதிய பையன் தன் உடையிலிருந்த புழுதியைத் தட்டியபடியே சென்ருன். போகும் போது ரொம்மை இடைக்கிடை திரும்பிப் பார்த்து பத்திரம் காட்டியபடியே சென்ருன். அதற்கு ரொம் நையங் காட்டினன். ரொம் மின் தலை திருப்பியது தான் தாமதம் புதுப் பையன் ஒரு கல்லை எடுத்து எறிந்தான். அது ரொம்மின் முதுகைப் பதம் பார்த்தது. புதுப்பையன் மானைப் போற் துள்ளி ஓடி மறைந்தான். ரொம் விடுவானு. அவனை வீடு வரை கலைத்துச் சென்று வீட்டை அறிந்து கொண்டான் வீட்டின் முன்னல் படலைகளுக் கிடையில் நின்று கொண்டான். தன் எதிரி வெளியே வரும் போது ஒரு கைபார்க்க எண்ணினன். ஆனல் எதிரியே வெளியே வராது யன்னலுக் குள்ளால் ரொம்முக்கு நெளிப்புக் காட்டினன். சற்று நேரத்தில் புதுப்பையனின் அம்மா வெளியே வந்தாள். ரொம் ஒரு மரியாதை தெரியாத கெட்ட பிள்ளை என்று ஏசி ரொம்மை உடனடியாக அந்தஇடத்தை விட்டுப் போகச் சொன்னுள்.

ரொம் அன்று மிக நேரங் கழித்தே இரவு வீடு திரும்பினன் அவன் வந்த கோலத்தைக் கண்ட சித்திக்குக் கோபம் பொத்துக் கொண்டு வந்தது. விடுமுறையான சனிக்கிழமையன்று சட்டாயம் அவனிடம் வேலைவாங்குவதென்று நிச்சயித்துவிட்டாள்.

சனிக்கிழமை காலையும் வந்தது. உலகம் முழுமையும் ஒளிப்பிரவாகமாயும் சந்தோஷமாயும் இருந்தது. எல்லார் மனதிலும் சந்தோஷமும் உற்சாகமும் குடி கொண்டிருந்தன



இதையெல்லாம் யோசித்த ரொம் ஜிம்மிடம் "ஜிம் நீ கொஞ்ச நேரம் வெள்ளையடித்தால் நான் உனக்கு நீரெடுத்து வந்து தருவேன்".

ஜிம் மறுத்துத் தலையை ஆட்டினன். "என்னல் முடியாது ரொம். வழியில் ஒருவருடனும் வெட்டிப் பொழுது போக்க வேண்டாமென்று எஜமானியம்மா சொல்லியிருக்கிருர்."

"அதெல்லாம் பரவாயில்லை ஜிம் அவரின் கதையை விடு. நான் இந்தா ஒரு நிமிடத்தில் வந்து விடுகிறேன் அவருக்கெங்கே இது தெரிய வரப்போகிறது

ஐயோ! எனக்குப் பயமாயிருக்கிறது ரொம். இதை அறிந்தால் எஜமானி சத்தியமாய் என் தலையையே சீவி விடுவார்.

அப்படியில்லையே, அவர் யாரையும் துன்புறுத்த மாட்டாரே. ஆக மிஞ்சினல் ஒரு அறை கொடுப்பார் அவ்வளவுதான். அந்த அறை என்ன நோகவா போகிறது? ஜிம் அதெல்லாம் சரி, நான் உனக்கொரு மாபிள் தருவேன் எப்படி?

ஜிம்மும் மனதப்பிறவி தானே. மாபிள் ஆசையை அவனுற் கட்டுப்படுத்த முடியவில்லை. வாளியைக் கீழே வைத்துவிட்டு, மாபிளைக் கையிலெடுத்துக் கொண்டான். அடுத்த கணம் அவன் வாளியை எடுத்துக் கொண்டு சிட்டாய்ப் பறந்துவிட்டான். ரொம் மீண்டும் மூச்சுவாங்க வெள்ளையடிக்கத் தொடங்கினன். அப்போது சித்தி ஒரு வெற்றிப் புன்னகையுடன் வீடு திரும்பிக்கொண்டிருந்தார்.


# குழப்படி மன்னன் ரொம்

அங்கம்: II

ஆனால் ரொம்மோ ஒரு வாளி சுண்ணாம்புடனும் ஒரு பிரசுடனும் காணப்பட்டான். அந்த தடுப்புச் சுவரைப் பார்த்ததுமே அவனது மனதில் கவலையும் வெறுப்பும் குடிகொண்டன.

அந்தத் தடுப்புச் சுவரோ முப்பது யார் நீளமும் ஒன்பது அடி உயரமும் கொண்டிருந்தது. அதைப் பார்க்கப் பார்க்க அவனுக்கு வாழ்க்கையே வெறுத்துப் போயிற்று. இனி வாழ்ந்துதான் என்ன பயன் என்றுகூட எண்ணினான். பெருமூச்சு விட்டபடியே பிரசினை வாளிக்குள் அமிழ்த்தி வெளியே எடுத்தான். சுவரின்மேல் இரண்டு மூன்றுதடவை பூசினான். பூசியபின் இன்னும் சுண்ணாம்பு பூசாத பகுதியை பார்த்தான். அதைப் பார்க்கவே அவனுக்கு மலைப்பாயிருந்தது திகைத்துப் போய் ஒருபுறம் அமர்ந்தான்.

இந்தச் சமயம் பார்த்து ஜிம் கையில் ஒரு வாளியுடன் பாடியபடியே துள்ளிக் குதித்து ஓடி வந்தான். முன்பெல்லாம் ரொம்முக்குத் தண்ணீர் அள்ளப் போவது மிகவும் அலுப்புப் பிடித்த வேலையாய் இருந்தது. ஆனால் இன்றோ அது அப்படிப்படவில்லை. நீரெடுக்கும் இடத்தில் எப்போதும் பிள்ளைகள் கூட்டமாய் இருப்பர் என்பது ரொம்முக்கு நினைவுக்கு வந்தது. பிள்ளைகள் அங்கே தம் முறை வருவதற்காகக் காத்திருப்பதும், ஓய்வெடுப்பதும், விளையாட்டுப் பொருட்களை மாற்றிக்கொள்வதும், சண்டைபிடிப்பதும், ஒருவரையொருவர் பழிப்பதும் ரொம்மின் மனக்கண்முன் தோன்றின. நீரெடுக்கும் இடம் அதிக தூரமில்லை என்பதும் அவன் நினைவுக்கு வந்தது. பொதுவாக ஜிம் நீரெடுத்துவரக் குறைந்தது அரை மணி நேரம் எடுக்கும்.



மார்க் டுவெய்ன்

ஆனால் ரொம்முக்கோ தொடர்ந்து வேலை செய்யமுடியவில்லை. தான் இன்றைய தினத்திற்காகப் போட்டு வைத்திருந்த திட்டத்தையெல்லாம் நினைத்துப் பார்த்தான். உடனே அவனுக்கு மற்றப் பையன்களின் ஞாபகம் வந்தது. அவர்களெல்லாம் இந்த விடுமுறை நாளை எப்படி எப்படியெல்லாம் கழித்திருப்பார்கள். என்னைக் கண்டால் கேலி செய்வார்களே என்று கவலைப்பட்டான். அவனுக்கு நெஞ்சமெல்லாம் தீப்பற்றி எரிவதுபோல் இருந்தது. உடனே தன் பொக்கிஷங்களை எடுத்து ஒவ்வொன்றாகப் பார்த்தான். உடைந்த பொம்மைத் துண்டுகள், மாபிள்கள், இன்னும் சில கஞ்சல்கள். ஒரு அரை மணி நேரத்துக்குக்கூட ஒருவரை வாங்க இவை போதுமானதாய் இருக்கவில்லை.

நம்பிக்கையிழந்து கொண்டுபோன இந்தத் தருணத்தில் அவனுக்கு ஒரு நல்ல யோசனை உதித்தது.

அவன் பிரஷ்ஷை எடுத்துக் கொண்டு மிக ஆறுதலாக வேலை செய்யத் தொடங்கினான். அந்தச் சமயம் ரொம்மை அடிக்கடி கேலி செய்யும் பென் ரோஜர்ஸ் கண்ணிற்பட்டான். அவனுடைய கையில் ஒரு சுவையான அப்பிள் பழம். ரொம் அவன் வந்ததையே கவனிக்காதது போல் தன் வேலையில் ஈடுபட்டிருந்தான். பென் சற்று நேரம் நின்று பார்த்தான். பின் தானே வலியச் சென்று 'ஹே! வசமாய் மாட்டிக் கொண்டாய், இல்லையா?' என்று கேட்டான்.

ரொம் பதிலே பேசவில்லை. பிரஷ்ஷை ஒரு கலைஞனின் பாணியிற் பிடித்துக் கொண்டு தன் வேலையை ரசித்துச் செய்தான்.

(22ஆம் பக்கம் பார்க்க)

ஆபிரிக்காவின் சகாராப் பாலைவனத்தினூடாக அந்த இரு ஒட்டகங்களும் நடந்து கொண்டிருந்தன.

'கெய்ரோ' நகரத்தை நோக்கி அவற்றின் பயணம் தொடர்ந்து கொண்டிருந்தது, சற்று இளைப்பாறலாம் என்று கீழே விழுந்து கிடக்கும் நிழல் துண்டங்களை ஆவலுடன் தேடின.

உடலை எரிப்பது போல் தாக்கும் வெயில்.


மெதுவாக நடந்தன இரண்டும்:

''முதுகில் பாரம் இல்லாமலே இப்படி மெல்லமாய் நடக்கிறம்'' என்று அலுத்துக் கொண்டது பண்டேலா.

''ஆ...... அந்தா...... அந்தா...... பேரீச்சமரமும் தண்ணீரும் தெரியுது

# கானல் நீர்

கோகிலா மகேந்திரன்



வெகு தூரத்திற்கு ஒன்றுமே தென்படவில்லை.

மணல்: மணல்; மணல்:

கால்களில் மௌனமாய் உள்ளுக்குள்ளே தெறிக்கும் ஊமை வலி;

நேரம் உச்சி மத்தியானம்.

''இனிமேல் என்னல் நடக்கவே முடியாது'' என்றது 'பன்டேலா' என்ற ஒட்டகம்.

''எனக்கும்தான் படுக்க வேண்டும் என்று ஒவ்வொரு உறுப்பும் கெஞ்சுகிறது. ஆனுல் என்ன செய்வது? புறப்பட்டு விட்டோம. யாத்திரையை இடையில் நிறுத்தக் கூடாது. இன்னும் கொஞ்சம் வா. பார்ப்போம்'' என்றது 'மோத்தா' என்ற மற்ற ஒட்டகம்.

கா...... வா...... கெதியாய் வா ....'' என்று திடீரென துள்ளியது மோத்தா.

அது சுட்டிய திசையில் மற்றதும் பார்த்தது.

''ஆமாம்... ஆமாம்... இரண்டு பேரீச்ச மரங்களும் நீரும்...'' என்று துள்ளி ஓடியது மற்றது.

''ஒட்டகம் தண்ணீர் குடிக்காமல் பல நாள் இருக்கும் என்று பெயர் எடுத்த நாங்களே இந்தப் பாடுபட வேண்டி இருக்கு'' என்று கூறிக்கொண்டே இரண்டும் விரைந்தன. இவை ஓட ஓட, நீரும் அப்பால் ஓடிக்கொண்டே இருந்தது.

'இதென்னப்பா? கைக்கெட்டினது வாய்க்கெட்டுதில்லை...'

'கானல் நீர் போலே தள்ளித் தள்ளிப் போகுது...'

'அப்ப. இதுதான் கானல் நீரோ?'

'அப்படித்தான் இருக்க வேணும்'

'உனக்கு எப்படித் தெரியும்?...'

'நான் பள்ளிக்கூடம் போனேன் சிறிதுகாலம். அப்ப ரீச்சர் படிப்பிச்சவ. .

'கானல் நீர் தெரியும் கவனம் என்றே?'


'ஓம். . விஞ்ஞான ரீச்சர். . '

'எனக்கு விளங்கேல்லே. . '

'நான் விளங்கப்படுத்திறன்' என்று பேரீந்து மர நிழலில் குந்திக் கொண்டது பண்டேலா.

'சரி சொல்லு . . '

இந்தப் பேரீச்ச மரத்தின் விம்பம் கீழே தெரிஞ்சிருக்கு. அதுதான் நாங்கள் நீர் நிற்குதென்று நினைச்சு ஏமாந்திட்டம்'




நீர் இல்லாமல் விம்பம் எப்படித் தெரியும்? '

'சூரியனின் வெப்பம் காற்றினூடாக வந்தாலும், பூமியின் மேற்பரப்புத்தான் அதிக வெப்பமாகுது'

'ம். . '

'இந்த வெப்பம் அருகில் உள்ள காற்றுப் படைகளுக்கு மெதுவாகப் போய்ச் சேருகிறது'

'சொல்லு'

'கீழே உள்ள காற்றுப்படை அதற்கு மேலே உள்ள காற்றுப்படையை விட அடர்த்தி குறைஞ்சு இருக்கு. '

'சரி . . '

'சூரிய ஒளி அடர்த்தி கூடிய ஊடகத்தில் இருந்து அடர்த்தி குறைந்த ஊடகத்திற்கு வருது . . '

'வரட்டன் . . '

'அப்ப. . செவ்வனே விட்டு விலகி முறியுது'

'ம் . . '

'ஒரு நேரத்திலே முற்முக முழு அகத் தெறிப்பு அடையுது... '

'கீறிக் காட்டு பார்ப்பம்...'

சூரிய ஒளிக்கதிர் முழு அகத்தெறிப்பு அடையும் முறையை மணலில் கதிர்ப்படமாய்க் கீறிக் காட்டியது பண்டலோ.

'விளங்கிட்டுது...'

எங்கடை கண் ஒளி நேர் கோட்டில் வரும் என்றுதான் நினைக்கும்... '

'அதனுல் விம்பம் கீழே தெரியுது'...

'பாத்தியே உனக்கும் விளங்கிட்டுது...

'இந்த மனிதருக்கெல்லாம் விளங்குது எனக்கு விளங்காதோ?'

'அப்ப, நீ மனிசரை விடக் கெட்டிக் காறனே? '

'ஓ அதுதானே அவை எனக்கு மேலே ஏறிப்பிரயாணம் செய்யினம்... அவையை ஒருக்கா இந்தப் பாலேவனத்திலே நடந்து போகச் சொல்லு பாப்பம்...'

## [விஞ்ஞானக் கதை]

'சரி கதை சொல்லிக்கொ மாறிட்டுது. இனி நடப்பம்' என்று எழுந்தது பண்டலோ

கைதேர்ந்த ஓவியன் தூரிகையில் அகப்பட்ட வர்ணத்தை அங்கு மிங்கும் அள்ளித் தெளித்தாற் போல் அந்திவானம் தென்பட்ட மாலே நேரத்தில் அவை கெய்ரோ' நகரை அண்மித்து விட்டன.

(19 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மீண்டும் பிரஷ்ஷால் ஒரு இழுவை இழுத்து விட்டு, அதன் அழகைத் தலையைச் சாய்த்துப் பார்த்தான். பென் அருகில் வந்தான். ரொம்முக்கு அந்த அப்பிளைத் தான் சாப்பிட்டாலோ என்று இருந்தது. வாயூறியது. ஆனாலும் அதை வெளிக்காட்டவில்லை. தன் வேலையிற் கண்ணும் கருத்துமாய் இருந்தான்.

ஹலோ, ரொம்! இன்று உனக்கு வேலையா? என்றான்.

''ஓ! பென், நீயா நான் நீ வந்ததைக் கவனிக்கவேயில்லை.''

''நான் நீந்தப் போகிறேன். உனக்கும் நீந்த வேண்டும் போல் இல்லையா? எதற்கும் நீ வேலையைக் கவனி. என்ன?''

ரொம் பென்னை ஒரு யோசனையுடன் பார்த்தான்;

''ம், இதை வேலையென்று சொன்னாய்? ரொம் பிரஷ்ஷை சுண்ணும்புக்குட் தோய்த்த படியே அலட்சியமாகக் கேட்டான்.

''இதை வேலையென்றும் சொல்லலாம், வேலை இல்லையென்றும் சொல்லலாம். ஆனால் என்னவோ இது ரொம் சோயருக்கு மிகப் பொருத்தமானது.',

என்ன, இது உனக்குப் பிடித்திருக்கிறது என்று சொல்கிறாய்?''

பிரஷ் தொடர்ந்து விளையாடிக் கொண்டே இருந்தது.

'இதை விரும்புவதா? இதை ஏன் விரும்பக் கூடாது எனறுதான் எனக்குப் புரியவில்லை. ஒரு பையனுக்கு ஒவ்வொரு நாளும் வெள்ளையடிக்கச் சந்தர்ப்பம் கிடைக்காதே.,

பென் யோசித்தபடியே அப்பிளை ஒரு கடி கடித்தான். ரொம்மோ பிரஷ்ஷை லாவகமாக மேலும் கீழும் இழுத்தான். பின்னர் இரண்டடி பின்னாற் போய் நின்று இழுவை சரியா என்று பார்த்தான். பின்னர் அருகே வந்து இங்கும் அங்குமாய் ஓரிரு இடத்தில் பிரஷ்ஷால் தொட்டான். பின்னரும் தள்ளிப் போய் நின்று பார்த்தான். பென் ரொம்மின் ஒவ்வொரு அசைவையும் ஆவலுடன் பார்த்துக் கொண்டு நின்றான். அதைப் பார்க்கப் பார்க்க அவனுக்கு அந்த வேலையில் ஒரு பிடிப்பு வந்தது.

'ரொம் என்னைக் கொஞ்சநேரம் அடிக்க விடு' என்றான் பென்.

'ரொம் முதலில் பிரஷ்ஷைக் கொடுக்கப் போனான். பின்னர் சற்று யோசித்து விட்டு.

'இல்லை, இல்லை இங்கே பார், சித்தி பொலி இந்தச் தடுப்புச் சுவரில் மிகவும் அக்கறை. ஏனென்றால் இது தெருக்கரையில் இருக்கிறது. இதுவே பின் சுவராயிருந்தால் நானும் கவலைப்படமாட்டேன். சித்தியும் கவலைப்படமாட்டார். இந்தச் சுவர் மிகவும் கவனமாய்ப் பூசப்பட வேண்டும் என்பது அவரின் விருப்பம். ஆயிரத்தில் ஒரு பையன் கூட, ஏன், பத்தாயிரத்தில் ஒரு பையன் கூட இதை சரியான முறையிற் செய்யமாட்டான்.

'அப்படியா? எனக்கு ஒரே ஒரு தடவை லேசாய்த் தடவத் தா... ரொம், உன்னுடைய இடத்தில் நானிருந்தால், எப்பொழுதோ உன்னைப் பூசவிட்டிருப்பேன்

**ஆங்கிலத்தில் அமெரிக்க எழுத்தாளர்**
**- மார்க் ருவெய்ன்**
**தமிழில் :-**
**ராணி சின்னத்தம்பி**

''பென், எனக்கென்ன தர விருப்பமில்லையா உண்மையில் தரத்தான் விருப்பம் நான் சித்தியைப் பற்றியல்லவா யோசிக்கிறேன். இப்படித்தான் ஜிம்மும் ஆசைப்பட்டான் ஆனால் சித்தி விடவில்லை. சிட்டும் ஆசைப்பட்டான் அவனையும் சித்தி விடவில்லை. இப்பொழுது நான்தான் இதற்குப் பொறுப்பு நீ அடிக்கத் தொடங்கி, ஏதாவது பிழை வந்தால்...

'ஓ' விழல் பேசாதே நான் மிகக் கவனமாய் இருப்பேன். எங்கே பார்ப்போம். பிரஷ்ஷைத் தா கொஞ்சம் சாப்பிட்டுவிட்டு இந்த அப்பிளை உனக்குத் தருகிறேன் சம்மதமா?''

'ஐயையோ, வேண்டாம் எனக்குப் பயமாய் இருக்கிறது.'

'முழு அப்பிளையும் தருகிறேன். பிரஷ்ஷைத் தா'

# நல்ல நெஞ்சம் காப்பாய்

நெஞ்சம் நொந்த போதும் – நீ
நியாயம் தவற வேண்டாம்
பஞ்சம் வந்த போதும் – நீ
பாவம் பண்ண வேண்டாம்

வஞ்சம் கொள்ளல் நன்றோ – நீ
வறுமை வாட்டும் போதும்
கொஞ்சம் சிந்தை செய்வாய் – நீ
கோபம் கொள்ள லாமோ

நஞ்சுப் போக்கை விட்டே – நீ
நல்ல நெஞ்சம் காப்பாய்
துஞ்சும் வாழ்வை விட்டே – நீ
தூக்கம் விட்டே எழுவாய்

பஞ்சும் நெருப்பும் சேர்ந்தால்
பற்றி எரிதல் பார்ப்பாய்
நெஞ்சும் நெஞ்சும் சேர்ந்தால் – நீ
நேசம் நிறையப் பூப்பாய்

ஊக்கம் உனது சொத்து – நீ
உழைத்தால் உனக்கு முத்து
ஆக்கம் உனது செல்வம்
அனுதினம் உழைத்து மகிழ்வாய்.

**சிங்கையாழியான்**

(22 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ரொம் பிரஷ்ஷைக் கொடுக்க மனமில்லாதவன் போல் கொடுத்தான். ஆனால் மனமோ குதூகலித்தது. பின், வெப்பத்தினால் வியர்வை ஆறாய் ஓட வேலை செய்துகொண்டிருந்தான். அந்த வேளையில் வேலை செய்து முடித்த கலைஞன் ரொம்மே நிழலில் அமர்ந்திருந்தபடி அப்பிளைச் சுவைத்துக்கொண்டிருந்தான். சாப்பிட்டபடியே இன்னும் யார் யாரை மடக்கலாம் என்றும் யோசித்தான். பையன்களும் வந்தபடியே இருந்தார்கள். வந்தவர் ஒவ்வொருவரும் ரொம்மைக் கேலி செய்யத் தொடங்கி வெள்ளையடித்துக் கொடுப்பதில் முடித்தனர். பென் வெள்ளையடித்துக் களைத்த சமயத்தில் பில்லி விஷ்ஷர் வந்தான். நல்ல நிலைமையில் இருந்த பட்டம் ஒன்றை வாங்கிக்கொண்டு ரொம் அவனை வெள்ளையடிக்க விட்டான். பில்லிக்குப் பின் ஜொனி மில்லர் அவன் ஒரு செத்த எலியையும் அதைச் சுழற்ற ஒரு கயிற்றையும் ரொம்முக்கு வெகுமதியாய்க் கொடுத்துவிட்டு வெள்ளையடிக்கத் தொடங்கினான். என்றிப்படியே மணிக்கொருவராய் வந்தபடியே இருந்தனர்; வேலையும் ஓடிக்கொண்டேயிருந்தது. ரொம்முக்கும் வெகுமதிகள் அதிகரித்துக் கொண்டே வந்தன.

பிற்பகல் மூன்று நான்கு மணியளவில் ரொம் பெரும் சொத்துக்கு அதிபதியாகிவிட்டான். மேலே கூறப்பட்ட பொருட்களை விட, பன்னிரண்டு மாபிள்கள், கண்ணாடி உடைந்த மூக்குக் கண்ணாடியொன்று, பார்க்கும் பொருளையெல்லாம் நீல நிறமாய்க் காட்டும் நீலக் கண்ணாடித் துண்டொன்று, எதையும் திறக்கப் பயன்படாத திறவுகோல் ஒன்று, ஒரு சோக்கட்டித் துண்டு தகரத்தில் செய்த பொம்மை வீரன், சின்னத் தவளைகள் இரண்டு, ஒற்றைக் கண்ணில்லாத பூனைக்குட்டியொன்று செப்புக் கதவுப் பிடியொன்று, நாய்ப்பட்டியொன்று கத்திப் பிடியொன்று, பழைய யன்னற் சட்டம் ஒன்று என இன்னும் பல பொருட்கள் ரொம்முக்குக் கிடைத்திருந்தன. ரொம்முக்கு நேரம் இனிதே கழிந்தது; எத்தனையோ நண்பர்களைச் சந்தித்தான்; சுவருக்கும் மூன்று தரம் வெள்ளையடிக்கப்பட்டிருந்தது. சுண்ணும்புக் கலவை தீர்ந்துபோய் விட்டது. அல்லாவிட்டால் ரொம் கிராமத்திலிருந்த அத்தனை பையன்களினதும் விலைமதிப்பற்ற சொத்தைச் சூறையாடியிருப்பான்.

வாழ்க்கை வாழ்வதற்கே என்று சொல்வது உண்மைதான் என ரொம் தனக்குள் எண்ணிக்கொண்டான். லேசிற் கிடைக்காத விஷயத்திற்கு ஆசைப்படுவது தான் மனித இயல்பு என்பதையும் ரொம் தன்னையறியாமலே அறிந்து கொண்டான்.

(வளரும்)

# சின்னச் சவுக்கு மரம்



காட்டில் ஒரு சிறிய சவுக்கு மரம் நின்றது. அழகான பச்சைநிற தும்புபோன்ற இலைகள் அதற்கு அழகு கொடுத்தன. அதனூடுகாற்று ஊதும்போது இனிய நாதம் எழுந்து ஒலித்தது. சூரிய ஒளியில் அம்மரம் ரம்மியமாக இருந்தது.

ஆனால் சவுக்குமரத்துக்கோ பெருங்குறை. தனக்கு தும்புபோன்ற இலைகள் வேண்டாம். இவை எப்பொழுதும் பச்சையாகவே இருக்கின்றனவே. எனக்குத் தங்கத்தினால் இலைகள் இருந்தால் எப்படியிருக்கும்? காட்டில் இப்படியான மரமே இல்லை என்றல்லவா பேசிக்கொள்வார்கள் என்று தனக்குள்ளேயே முணுமுணுத்தது.

வன தேவதையொன்றிற்கு இதன் குரல் கேட்டது. தனது மந்திரக் கோலால் மரத்தைத் தொட்டது. அடுத்தநாள் சவுக்கு மரத்தின் இலைகள் யாவும் தும்புருவம் மாறி பெரிய இலைகளாகத் தங்கத்தினால் ஆனது சூரிய ஒளி அதன் மீது பட்டு மின்னியது காற்றில் அவை அசையும் போது சலங்கை ஒலி எழுந்தது.

மரத்திற்கோ மட்டற்ற மகிழ்ச்சி என்னைப்போல அழகுள்ள மரம் எங்குள்ளதோ? என்று பெருமிதம் அடைந்தது. ஒரு திருடன் அவ்வழியால் வந்தான். 'ஆஹா எவ்வளவு புதையல்' என்று கூறியவாறே ஒரு இலையையும் விடாது பறித்துச் சென்றுவிட்டான். தங்க இலைகள் சரிவராது மனிதர்களுக்கோ தங்கத்தின் மீது சரியான ஆசை. அவர்களை சும்மா விடமாட்டார்கள் எனவே கண்ணாடியால் ஆன இலைகள் என்றால் அருமையாக இருக்குமே. மக்களும் அதனைத் தேட மாட்டார்கள் என்றது சவுக்குமரம்.

ஆக்கம்:

**ஹெலன் பேர்ண்ஸ்**

தேவதை வந்தது மந்திரக்கோலால் மரத்தைத் தொட்டது. ஆஹா என்ன அற்புதம் அழகிய கண்ணாடியிலான இலைகள் வந்தது. மரத்துக்கோ மீண்டும் மகிழ்ச்சி பெருமிதமாக நிமிர்ந்து நின்றது பலமான காற்று அடித்தது. இலைகள் ஒன்றுடன் ஒன்று மோதின. கண்ணாடியல்லவா? நொருங்கித் தூள் தூளாகக் கீழே விழுந்தன. மீண்டும் வெறும் மரம். என்னே சோதனை? மரம் வேதனையடைந்தது. சரி இனிமேல் எனக்கு மற்றைய மரங்களைப் போல அகன்ற பச்சை இலைகளாவது இருந்தால் பரவாயில்லை. அவை நிறம் மாறும். தங்கநிறம் வரும் பின்னர் துளிர்க்கும், தளிர்க்கும் இதே மிக அருமைதான் இதுவே போதும் என்றது.

அடுத்தநாள் வனதேவதையின் அருளால் அழகிய பசிய இலைகள் தோன்றின மரத்துக்கு மீண்டும் பெருமை. ஓர் ஆடு வந்தது. அவ்வளவு இலையையும் லபக்கென்று கடித்துச் சாப்பிட்டுவிட்டுத் தன்வழியே சென்றது. மரம் மீண்டும் வெறுமையாயிற்று. ஒரு பெருமூச்சுடன் பழைய தும்பு வடிவ இலைகளே போதும் என்றது. அடுத்தநாள் அது பழைய வடிவம் பெற்று அமைதியுடன் நின்றது.

# கோபுவும் ராமுவும்

செல்வன். க. பிரபாகர்
(கொக்குவில் இந்துக்கல்லூரி)

கோபுவிற்கு அன்று நித்திரையே வரவில்லை. புரண்டு புரண்டு படுத்தான் அவனுடைய சிந்தனையெல்லாம் புதிதாக வந்து சேர்ந்த ராமுவை கட்டுரைப் போட்டியில் கலந்து கொள்ள விடாமல் செய்வதே. ஆ ! இப்படிச் செய்யலாம். என ஒரு தீர்க்கமான முடிவை எடுத்துக் கொண்டு நிம்மதியாகத் தூங்கினான்.

எவ்வொரு வருடமும் கோபுவின் பாடசாலையில் நடக்கும் கட்டுரைப் போட்டியில் கோபுவே முதற் பரிசைத் தட்டிக் கொள்ளுவான். ஆனால் சென்ற வருடம் புதிதாகச் சேர்ந்த ராமுவோ அந்தக் கட்டுரைப் போட்டியில் கோபுவை முறியடித்து விட்டான். அதனால் தான் கோபுவிற்கு இந்த மனப்போராட்டம்.

கோபுவின் வகுப்பின் கணித ஆசிரியர் பல நாள் பாடசாலைக்கு சமூகமளிக் காததால் அவர் ஒவ்வொரு நாள் இரவும் கணிதப்படிப்பு சொல்லிக் கொடுப்பதுண்டு. வகுப்பு முடிந்ததும் தன்காரியத்தை முடிக்கலாம் எனக் கோபு எண்ணிக் கொண்டான்.

பாடசாலை முடிந்து மாலை நேரமாகியது. கணிதப் புத்தகத்தையும் பேனையையும் ஒரு வைரமான தடியொன்றையும் எடுத்துக் கொண்டு போகும் வழியில் மறைவான இடத்தில் வைத்து விட்டு ஆசிரியர் வீட்டுக்கு சென்றான். ஆசிரியர் வகுப்பை முடித்ததும் ஓட்டமும் நடையுமாக சென்று தடியுடன் ஒரு முச்சந்தியின் கரையில் அமைந்த புதரில் மறைந்து நின்றான்.

தூரத்தே ராமு வருவது தெரிந்தது. இருட்டில் தன்னை ராமுவுக்கு தெரியாது என நினைத்த கோபு தடியுடன் அவனைத் தாக்க ஓடினான். மறு வீதியில் வேகமாக வந்த மோட்டார் சைக்கிள் கோபுவை கண நேரத்தில் பதம் பார்த்தது.

இதைக் கண்ட ராமு துரித கதியில் பாய்ந்து வந்து கோபுவை இனங் கண்டு மருத்துவ மனையில் சேர்ப்பித்தான். பல மணி நேரம் மயக்கமடைந்திருந்த ராமு இலேசாக கண் விழித்தான். அவனைச் சுற்றி அவன் அப்பா அம்மா, அம்மம்மா, ராமு போன்றோர் கலங்கிய கண்களுடன் இருக்கக் கண்டான்.

உடனே அவனது தாய் தழுதழுத்தவாறே தம்பி ! உனக்கு இரத்தம் நல்லா வெளியேறினதும் இந்தத் தம்பி தான் இரத்தம் கொடுத்தான் என ராமுவை சுட்டிக் காட்டினாள். கோபுவின் தலையெல்லாம் திடீரென்று மின்னல் தாக்கியது போல் உணர்ந்தான். பின் திருந்திய மனதுடன் ராமுவிடம் நடந்ததைக் கூறி மன்னிப்பு கோரினான் அவனும் மன்னித்தவாறே கோபுவை அரவணைத்தான்.

இப்போது கோபுவும், ராமுவும் நல்ல நண்பர்கள்.

★ ★

(11 ஆம் பக்கத் தொடர்)

ஓடிப் போனுர். அவசர அவசரமாக நாயை இழுத்தெடுத்தார். முகத்திலே காயம், பல்லும் இரண்டொன்று உடைந்து விட்டது. என்ருலும் கவனமாகக் கொண்டு வந்து துடைத்து வேண்டிய வைத்தியம் எல்லாம் செய்தார். என்ருலும் அடிபட்ட நோவால் ஊ, ஊ என்று அணுங்கியது சுதாவும் பாடசாலையால் வந்து விட்டான். ஏனம்மா நாயை வெளியே விட்டனீங்கள் என்று கொஞ்சம் கோபமாகக் கேட்டான். அவனுடைய அம்மாவும் ஆறுதல் சொல்லி அவனைத் தேற்றினுர்

பின்பு சாப்பாடு வைத்தான். அதற்குச் சாப்பிட முடியவில்லை. எனவே சுதாவும் சாப்பிடவில்லை. இதைப் பார்த்த சுதாவின் அண்ணு சங்கர்லால் 'ஏன் சுதா நீ சாப்பிடவில்லை?'' என்று கேட்டார். ''என்ன அண்ணு பாவம் பிளசம் சாப்பிடாமல் நான் எப்படிச் சாப்பிடுவது நான் ஆஸ்பத்திரியில் இருக்கும்போது அது சாப்பிடவில்லையே. நான் மனிதன் அது மிருகம், மிருகமே என்னிலே அன்பு காட்டியது. நான் பேசும் பிராணி. பேசாத பிராணியிலும் பெரியவன் தானே'' என்ருன். அப்படிக் கதைக்கும்போது அப்பாவும் வந்து விட்டார். சுதா அப்பாவிடம் சொல்லி நாயையும் கொண்டு சென்று மிருக வைத்தியருக்குக் காட்டி மருந்தும் கொடுத்து ஊசிமருந்தும் ஏற்றி வந்தான். அதன் பின் நாய்க்குச் சாப்பாடு வைத்தான். மெல்ல மெல்லமாக நாயும் சாப்பிட்டது.

சுதாவுக்கு வெகு புளுகம். தானும் சாப்பிட்டான் பக்கத்தில் இருந்து தன் செல்லப் பிள்ளையைத் தடவித் தடவிக் கதைத்துக் கொண்டு. உயிர்களிடத்து அன்பு வேண்டுமென்று பாரதியார் சொன்னதை – அம்மாவுக்குப் பாடிக் காட்டி மகிழ்ந்தான். எப்படி சுதாவின் ஜீவகாருண்யம்.

★

# பத்து! பத்து! பத்து!

சிவானந்தர்



★ காலை நான்கு மணிக்கு விழித்தெழு. ஜபமும், தியானமும் செய்.

★ ராஜச உணவு, மதுபானம், புகை பிடித்தல் ஆகியவைகளை விட்டுவிடு.

★ தினந்தோறும் இரண்டுமணி நேரம் மௌனத்தைக் கடைப்பிடி. உண வருந்தும் போது பேசாதே.

★ எவ்விதத்திலும் உண்மையேபேசு. குறைவாகவும் இனிமையாகவும் பேசு.

★ உன்னுடைய தேவைகளைக் குறைத்துக்கொள். திருப்தியாக சந்தோஷமாக வாழ்க்கை நடத்து.

★ மற்றவர் உணர்ச்சிகளை எப்பொழுதும் புண்படுத்தாதே. எல்லோரிடத்திலும் அன்பாக இரு.

★ நீ செய்திருக்கும் தவறுகளைப் பற்றிச் சிந்தனை செய். தன்னைத் தானே விசாரணை செய்துபார்.

★ வேலையாட்களை எதிர்பார்த்திருக்காதே. உன் வேலையை நீயே செய்து கொள்.

★ காலைவிழித்தெழுந்த உடனும், இரவு உறங்கும் முன்பும் ஆண்டவனை நினை.

★ தினசரி யோகாசனப் பயிற்சிசெய்.

# இரு சிறுவர் தீரம்

பாடசாலை மணி அடித்து ஓய்ந்தது. மாணவர்கள் எல்லோரும் கூண்டில் இருந்து திறந்துவிட்ட வெண் புறுக்களாய் பாடசாலையை விட்டு வெளியேறிக் கொண்டிருந்தார்கள். சத்தியனும் வேணனும் கை கோர்த்தபடி, பாடசாலையைவிட்டு வெளியேறினர். இருவரும் இணைபிரியா நண்பர்கள். சூரியன் தன் ஆதிக்கத்தைப் பலப்படுத்தி இருந்தான். பாடசாலைத் தண்ணீர்க் குழாயடியில் மாணவர்கள் குவிந்துநின்றார்கள்.

வேணனின் தந்தை சிதம்பரம், அவ் ஊரிலுள்ள பணக்காரர்களில் பெரும் பணக்காரர் அவர். சத்தியனின் தந்தை முருகையா சிதம்பரத்திடம் வேலைபார்த்து வந்தார். சத்தியனின் அன்புத் தங்கை சீதா. குழந்தைகள், தாய் இல்லாக் குறையை உணராவண்ணம் அன்பாக நடந்துகொள்வார் முருகையா. சத்தியனின் தாய் நோய்வாய்ப்பட்டு, இறந்து மூன்று வருடங்களாகிவிட்டது. வேணன் சிதம்பரத்துக்கு ஒரேயொரு மகன். அதனால், சிதம்பரம் தன் மகனிடத்தில் அளவற்ற பாசம் வைத்திருந்தார். வேணன் கேட்பதை எல்லாம் உடனே வாங்கிக் கொடுத்துவிடுவார்.

சத்தியன் இயல்பாகவே துடுதுடுப்பானவன். எதையும் துணிந்து செய்வான். அவனுக்கு ஜேம்ஸ் பாண்ட், டார்ஜன் சித்திரக் கதைப்புத்தகம் என்றால் சாப்பாடுகூட இல்லாமல் இருந்து வாசிப்பான். தானும் ஜேம்ஸ் பாண்ட்டையும் டார்ஜனையும் போல சாகசங்கள் செய்வதாக கற்பனை செய்து மகிழ்வான். வேணன் அதற்கு மாறான சுபாவம் உள்ளவன். பாடசாலை விடுமுறை நாட்களில் வேணனும் சத்தியனும் அவ் ஊர் எல்லையிலுள்ள ஆற்றுக்குச் செல்வார்கள். அங்கே நீந்தி விளையாடுவார்கள். வேணன் ஆற்றங்கரையைவிட்டு அசையமாட்டான். ஆனால், சத்தியனே மறுகரை வரை போய்வருவான்.

தோளில் புத்தகச் சுமையுடன் இருவரும் கைகோர்த்தபடி, தெரு ஓரமாக நடந்து சென்றார்கள். சத்தியனின் கையில் டார்ஜனின் கதைப் புத்தகம் இருந்தது. "வேணு, இஞ்சபார் டார்ஜன் சிறுத்தையோட சண்டை போடுகின்ற படத்தை" சத்தியன் புத்தகத்தின் முகப்பு அட்டையைக் காட்ட, வேணன் அதை ஆவலுடன் பார்த்தான்.

அப்பொழுது கார் ஒன்று அவர்களைக் கடந்து சென்றது. சத்தியனின் கவனம் காரில் சென்றது. காரின்பின் கண்ணாடி வழியாக உள்ளே கண்ட காட்சி சத்தியனை திடுக்கிட வைத்தது. 'வேணன் அங்கபார் காருக்குள்ள சின்னப் பிள்ளையொன்றை கட்டிக்கொண்டு போறாங்கள்''. ஓம் சத்தியன் நானும் கண்டனான். வா நாங்கள் வீட்டுக்கு கெதியாப் போவம். இதில நின்றால் எங்களையும் கூட்டிக்கொண்டு போடுவாங்கள்'' என்று அவசரப்படுத்தினான் வேணன் "டேய் உனக்கு என்ன மூளையடா? யாரோ சின்னப் பிள்ளைய கடத்திக் கொண்டு போறாங்கள். நாங்கள் போய் காப்பாற்ற வேணும். கார் எங்க போகுது என்று பார்ப்பம் ஓடிவா''.

சத்தியன் தெரு ஓரமாக கார் போன திக்கில் ஓடத் தொடங்கினான். கார் பிரதான வீதியினின்றும் விலகி, ஒழுங்கைக்குள் திரும்பியது. இருவரும் மூச்சிரைக்க ஓடினார்கள். இருவரும் ஒழுங்கைக்குள் திரும்பினார்கள். ஆனால், காரைக் காணவில்லை.

'சத்தி கார் போட்டுது. இனி எங்க போறது; வீட்ட போடுவம் வா''.

''காரின்ர டயர் அடையாளத்தைப் பார்த்து கார்போன இடத்தைக் கண்டு பிடிக்கலாம். பயப்பிடாமல் வா'' என்று தைரியமூட்டினான் சத்தியன்.

(30 ஆம் பக்கம் பார்க்க)

## அர்ச்சுனு சிறுவர் வட்டம்

முழுப்பெயர்: செல்வன்/செல்வி ..........

.................................................

.................................................

வகுப்பு: .................வயது..................

பாடசாலையின் பெயர்,- ......................

.................................................

வீட்டு முகவரி;.................................

.................................................

மாணவரின் கையொப்பம்; ........................

.................................................

அதிபர் கையொப்பம்; ............................

.................................................

அனுப்ப வேண்டிய முகவரி:-
ஆசிரியர்
''அர்ச்சுனு''
அஞ்சல் பெட்டி எண்: 23
யாழ்ப்பாணம்

# அர்ச்சுனு சிறுவர் வட்டம்

15 வயதுக்குட்பட்ட சிறுவர்கள் அர்ச்சுனு சிறுவர் வட்டத்தில் உறுப்பினர்களாகச் சேரலாம்.

உறுப்பினர்களாகச் சேர விரும்புவோர் ''அர்ச்சுனு''வில் வெளியாகும் 33 கூப்பன்களை நிரப்பி அனுப்புதல் வேண்டும்.

உறுப்பினர்களாகச் சேர்ந்த மாணவர்கள் எழுதும் கதை, கவிதை, கட்டுரைகள் ஏனையவை அர்ச்சுனுவில் வெளியாகும்.

மாணவர்கள் தமது ஆக்கங்களைத் தாளில் ஒரு பக்கத்தில் மட்டும் எழுத வேண்டும். மாணவர் தானுகவே எழுதினுர் என்று வகுப்பாசிரியர் அல்லது அதிபர் உறுதியுரை வழங்க வேண்டும்.

அங்கத்தவர் உறுப்புரிமை அட்டை அஞ்சலில் அனுப்பி வைக்கப்படும்.

## அர்ச்சுனு சிறுவர் வட்ட உறுப்பினர்கள்

| பெயர் | உறுப்புரிமை எண் |
|---|---|
| செல்வி ஜெனற் மகிழினி அருளானந்தம்<br>யா/ திருக்குடும்பக் கன்னியர் மடம்<br>ஆங்கிலப் பாடசாலை | 64 |
| செல்வி மாசிலாமணி பானு<br>உடுவில் மகளிர் கல்லூரி | 65 |
| செல்வன் செ, நிருபன்<br>யாழ் இந்துக் கல்லூரி | 66 |
| செல்வன் செல்லத்துரை சசிகரன்<br>கோப்பாய் இந்துக்கல்லூரி | 67 |
| செல்வன் நடராஜா நந்தகுமார்<br>கொக்குவில் இந்துக் கல்லூரி | 68 |
| செல்வன் கணேசதாசன் செந்தூரன்<br>யாழ் இந்துக் கல்லூரி | 69 |
| செல்வன் இராசசிங்கம் தர்சன்<br>யா/கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி | 70 |
| செல்வன் கதிர்காமத்தம்பி இராமேஸ்வரன்<br>கொக்குவில் இந்துக் கல்லூரி | 71 |
| செல்வன் சிவராஜா சுரபாஸ்கரன்<br>கணேசா வித்தியாலயம் நாரந்தனை<br>வடக்கு ஊர்காவற்றுறை | 72 |

(32ஆம் பக்கத் தொடர்ச்சி)

COMPUTER PROGRAMMING IN

* BASIC
* COBOL
* d BASE III +
* WORD PROCESSING + LOTUS 1-2-3

- O/L படித்த இருபாலாரும் சேரலாம்.
- IBM ( Compatible ) கம்பியூட்டரில் பயிற்சி வழங்கப்படும்.
- பயிற்சி முடிவில் அங்கீகாரம் பெற்ற சான்றிதழ் வழங்கப்படும்.

JOIN WITH US TO STUDY LATEST COMPUTER TECHNOLOGY

UNIKCO COMPUTER CENTRE
NO:5, POWER HOUSE ROAD,
2nd, LANE, JAFFNA.
( Near Sub Post Office )

எவர்விஷன்

உங்கள் மங்கள வைபவங்களை சிறந்த முறையில் படமாக்க

புதிய தொழில்நுட்பமுறையை புகுத்தி சிறந்த தொழில் நுட்ப வியலாளர்களால்

நவீன டிஜிடல் விஷன்- மிக்ஷர்

DIGITAL VISION MIXER

பாவித்துப் படமாக்கப்படுகிறது.

விபரங்கட்கு நேரில் வரவும்

எவர்விஷன்
21 A மணிக்கூட்டுவீதி
யாழ்ப்பாணம்

(27 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இருவரும் டயர் அடையாளத்தைப் பின்பற்றிச் சென்றனர். சற்றுத் தூரம் சென்றதும் வேணன் தயங்கி நின்ருன்.

''வேணு சுந்தரம் மாமா வாருர். என்னைக் கண்டால் பேசுவார். இப்ப என்ன செய்யிறது''.

''அவர் ஏதும் கேட்டால் நான் சொல்லுறன் நீ வா''.

சுந்தரம் வேணனின் தாயின் அண்ணன். அதாவது, வேணனுக்கு மாமா. அவர் பொலிஸ் அதிகாரி. அதனுல் அவர் சாதாரணமாகக் கதைத்தாலும் அதட்டுவது போலத் தான் இருக்கும். வேணன் அவரைக் கண்டால் பேயைக் கண்டது போல் நடுங்குவான்.

சைக்கிளை இருவர் அருகிலும் நிற்பாட்டினர். ''இரண்டு பேரும் எங்க போறியள்.

★ ந குகதாசன் ★

சாவகச்சேரி / இந்துக்கல்லூரி

''அது வந்து... வந்து'' என்று வேணன் இழுக்க.

''எங்களின்ர தமிழ் வாத்தியார் வேணனின்ர தமிழ்ப் புத்தகத்தைக் கொண்டு போனவர். நாளைக்கு பரீட்சை. அது தான் புத்தகம் வேண்டப் போறம்''.

''வேணு இரவு வீட்டுக்கு வாறன் அப்பாவிடம் சொல்லு என்ன?'' சுந்தரம் மாமா சைக்கிளில் போனதும் தான் வேணன் நிம்மதிப் பெருமூச்சு ஒன்று விடுத்தான். இருவரும் தொடர்ந்து நடந்தனர்.

''வேணன் கார் இந்த தென்னந் தோப்புக்குள்ள போட்டுது. அதுதான் சுந்தரம் மாமாவும் காரைக் காணேல்ல. இல்லாட்டி அந்தப் பிள்ளைய காப்பாற்றி இருப்பார்.''

''சத்தி, மாமாவிடம் அதைச் சொல்லி இருக்கலாம்.''

''என்றுலும் நாங்கள் காப்பாற்றினல் எங்களுக்குப் பெருமை தானே.''

''சரி இப்ப என்ன செய்யிறது'' என்று ஆவலுடன் வேணன் கேட்க,

''வா தென்னந் தோப்புக்குள்ள போய்ப் பார்ப்போம்.''

இருவருமாக தென்னந் தோப்பினுள் நுழைந்தனர். தென்னந் தோப்பின் கேற் அகலத் திறந்து இருந்தது. குளிர்மையான காற்று இருவரையும் தழுவிச் சென்றது. தென்னைகள் வரிசையாக அணிவகுத்து நின்றன. உரிக்கப்படாத தேங்காய்கள் ஒருபுறம் மலையாக குவிந்து கிடந்தன. மறுபுறம் காய்ந்த தென்னேலைகளும் கிடுகுகளும் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன.

தென்னந் தோப்பின் மத்தியில் வீடு ஒன்று கம்பீரமாகக் காட்சி தந்தது. அதன்முன் கார் ஒன்று நின்றது. வேணனும், சத்தியனும் அந்த வீட்டை நோக்கி மரங்களின் பின்னல் மறைந்து மறைந்து சென்றனர். அந்த வீட்டினுள் இருந்து மூவர் வெளியே வந்தனர். தமக்குள் ஏதோ பேசிக்கொண்டனர். பின்னர், அவர்களில் ஒருவன் தன்னிடம் இருந்த பூட்டைக் கொண்டு, கதவைப் பூட்டினுன். மற்றவன் இழுத்துப் பார்த்து, பூட்டி இருப்பதை உறுதி செய்து கொண்டனர்.

## சிறப்புச் சிறுகதை

பின்னர் மூவரும் காரில் ஏறினர். தென்னம் தோப்பினுள் புழுதியை கிளப்பிக் கொண்டு கார் புறப்பட்டது. கேற் அருகில் கார் நிற்க, ஒருவன் இறங்கி கேற்றைப் பூட்டினுன். அவன் காரில் ஏற கார் பிரதான வீதியை நோக்கிச் சென்றது.

இருவரும் வீட்டை நெருங்கினர். வேணன் வீட்டுக் கதவை தள்ளிப் பார்த்தான். கதவு அசையவில்லை.

''வேணு வீட்டைச் சுத்திப் பார்ப்போம்'' சத்தியனுடன் வேணனும் வீட்டைச் சுற்றி வந்தான். வீட்டின் ஒரு ஓரமாக கொட்டில் ஒன்று இருந்தது. உள்ளே தட்டு முட்டுச் சாமான்கள் நிரம்பி இருந்தன சத்தியன் கொட்டிலின் உள்ளே சென்று நீளமான கயிறு ஒன்றை எடுத்துக் கொண்டான்

''சத்தி கயிறு என்னத்துக்கு'' ஆவலுடன் கேட்டான் வேணன்.

''வீட்டுக்கு பக்கத்தால மாமரம் ஒன்று இருக்குது கவனித்தாயா மாமரத்தில் ஏறினு வீட்டின் கூரைக்கு மேலே இறங்கலாம். ஓட்டைக் கழற்றி, கயிறால உள்ள இறங்கலாம்.''

'நல்ல ஐடியா தான். ஆனல் பிறகு மேலே வரும் போது கஷ்டம் தானே.'

'அதுக்கும் வழி இருக்குது. வீட்டுக்கு பின்கதவு திறப்பால தான் பூட்டிக்கிடக்குது. உள்ளே போய் கதவு கொழுக்கியைத் திறந்தா, கதவைத் திறந்த மாதிரிதான்.'

'அதுக்கு முதல் கார் வந்திட்டால்' அச்சத்துடன் கேட்டான் வேணன்.

'வந்தா அதைப்பற்றி பிறகு யோசிப்பம் நான் மரத்தில ஏறப்போறேன். நீ கீழே நின்று யாரும் வந்தால் சொல்லு.'

சத்தியன் மாமரத்தின் மீது ஏற முயற்சித்தான். அருகில் கிளைகள் இல்லாததால் கீழே சறுக்கி விழுந்தான். மீண்டும் ஏற முயற்சித்தான். அப்போது, வேணன், 'சத்தியன் அதில ஒரு ஏணி சாத்தி வைத்துக்கிடக்குது.' என்று ஆவலுடன் கத்தினுன்.

இருவருமாக ஏணியை தூக்கிவந்து மாமரத்தின் மீது சாத்தினர். சத்தியன் சுலபமாக மாமரத்தின் மீது ஏறினுன். தோளில் கயிற்றை சுருளாக்கி மாட்டினுன். வீட்டின் கூரையை நோக்கிச்சென்ற கிளையில் அவதானமாக நடந்தான். கிளையிலிருந்து கூரை மீது குதித்தான். ஓடுகள் பாசிபடர்ந்து, காய்ந்து போய்க் கிடந்தன. மாஞ் சருகுகளை காலால் தள்ளியபடி கூரையின் ஒரு பக்கமாக வந்தான். ஓடுகளைக் கவனமாகக் கழற்றினுன். கழற்றிய பின்பு தலையை நுழைத்து கீழே பார்த்தான்.

'வேணு இரண்டு பிள்ளைகளை வாயையும் கையையும் காலையும் கட்டி வைத்திருக்கிருங்கள்.'

'சத்தி கெதியா உள்ள இறங்கு. கார் வந்தாலும் வரும்.'

சத்தியன் வீட்டு வளையில் கயிற்றை இறுக்கமாகக் கட்டினுன். கயிற்றின் மறுமுனையை கீழே விட்டான். கயிற்றின் வழியாக அவசர அவசரமாகக் கீழே இறங்கினுன். வீட்டின் மூலையில் கட்டி வைக்கப்பட்டிருந்த சிறுவர்களை நெருங்கி, கட்டுக்களை அவிழ்த்து விட்டான். இவருக்கும் சத்தியனை விடக் குறைந்த வயதுதான் இருக்கும். பணக்கார வீட்டுப் பிள்ளைகள் என்பதை அவர்களது உடல் செழுமை காட்டியது. சத்தியன் அவர்களைக் கயிற்றின் பிணைப்பில் இருந்து விடுவித்ததும், கேவிக் கேவி அழத்தொடங்கினர்.

'இரண்டுபேரும் அழக்கூடாது. உங்கட வீட்டில கொண்டு போய் விடுவேன். தைரியமாக இருக்க வேணும்.' ஆறுதல் கூறி இருவரையும் தேற்றினுன் சத்தியன்.

வீட்டின் உட்புறத்தில் கிடந்த கதிரையை இழுத்து வந்து, அதில் ஏறி, கதவின் கொழுக்கியை விடுவித்தான். கீழே இறங்கி கதவை உட்புறமாக இழுக்க கதவு படீர் என்ற சத்தத்துடன் திறந்துகொண்டது. மூவருமாக வெளியே வந்தனர்.

'சத்தியன் கார் வருகுது.' வேணண் பதட்டத்துடன் ஓடி வந்தான்.

'சரி எல்லோரும் பின்பக்கமாக ஓடுவோம் வாங்கோ' சத்தியன் குரல்கொடுக்க எல்லோரும் தென்னந்தோப்பின் பின்புறமாக ஓடத்தொடங்கினர்.

(34 ஆம் பக்கம் பார்க்க)

அர்ச்சுனா தம்பி, தங்கைகளே,

குழந்தைக் கவிஞரின் பாடல்களை நீங்கள் நிறையப் படித்திருக்கிறீர்கள். அவற்றுள் உங்களுக்குப் பிடித்தபாடல் எது? அதை நீங்கள் ஏன் விரும்புகிறீர்கள்? உங்களுடைய கருத்துக்களைக் கட்டுரை வடிவில் எழுதி அனுப்புங்கள்.

சிறந்த கட்டுரைகளை அர்ச்சுனாவில் வெளியிடுவோம்.

கட்டுரையோடு கீழேயுள்ள படிவத்தையும் வெட்டி நிரப்பி அனுப்ப மறந்துவிடாதீர்கள்.

## அழ. வள்ளியப்பா பாடற்சுவை

கட்டுரையாளர் பெயர் : ..............................................

சொந்த முகவரி : ..............................................

..............................................

பாடசாலை : ..............................................

விரும்பும் பாடல் / பாடல்கள் உள்ள நூல் : ..............................................

கட்டுரை எனது சொந்த ஆக்கமே என உறுதி கூறுகிறேன்.

..............................................
கட்டுரையாளர் ஒப்பம்

**அர்ச்சுனா சிறுவர் வட்ட உறுப்பினர்கள் . . . . . .**

(28ஆம் பக்கத் தொடர்ச்சி)

செல்வன் சுப்பிரமணியம் சிவபாதமூர்த்தி 73
யாழ் இந்துக் கல்லூரி

செல்வி சிதம்பரப்பிள்ளை சதீஸ்வரி 74
கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி

செல்வன் மு. லிங்கேஸ்வரன் 75
நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரி

செல்வன் ரகுநாதன் துஷ்யந்தன் 76
யா/காட்லிக் கல்லூரி பருத்தித்துறை

செல்வி விஜிதா பேரம்பலம் 77
மானிப்பாய் மகளிர் கல்லூரி

செல்வி அனிதா சருணனந்தசிவம் 78
புனித பொஸ்கோ வித்தியாலயம்

செல்வன் கனகரட்ணம் குகநேசன் 79
ஹாட்லிக் கல்லூரி பருத்தித்துறை

செல்வி ராதிகா கணேசரட்ணம் 80
தி/புனித மரியாள் கல்லூரி திருகோணமலை

செல்வன் சண்முகலிங்கம் சண்முகசீலன் 81
இந்துக் கல்லூரி யாழ்ப்பாணம்

செல்வன் சி. காசிலிங்கம் லிங்கேசன் 82
கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி

செல்வன் துரைசிங்கம் குணராஜா 83
இந்துக் கல்லூரி யாழ்ப்பாணம்

செல்வன் பரராஜசிங்கம் தர்மசங்கரன் 84
கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி

செல்வன் மகாலிங்கம் ராஜரூபன் 85
மகாஜனக் கல்லூரி தெல்லிப்பழை

கேக்

தயாரிப்புக்குத் தேவையான

- சுல்தானாஸ்
- கரண்ஸ்
- வைற் றேசன்ஸ்
- ஈச்சம் பழம்
- கேக் எசன்ஸ்
- கலரிங் வகைகள்

சாஸ்ஸ்

தயாரிப்புக்கள்

- ஜாம் வகைகள்
- ஐசிங்சுகர்
- கொக்கோ பவுடர்
- மாஜரின்
- கோடியல்

இவற்றை ஒரே இடத்தில் மலிவாகப் பெறுவதற்கு

# பெட்டா எசன்ஸ் சப்ளையர்ஸ்

223, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 24823

தலைமை அலுவலகம்:
18/1, டாம் வீதி,
கொழும்பு 12
தொலைபேசி: 26235 & 549265

# M. T. SOMASUNDARAM & SONS

## CEYLON TILES MERCHANTS.

- *All types of tiles*
- *Bricks*
- *Cement Grills*
- *Flower Pots*

FOR SALE AT CHEAP RATES.

GOODS DELIVERED AT DOOR - STEP.

DEALERS FOR OVER 30 YEARS.

*Branch*
ADIYAPATHAM ROAD,
NALLUR.
Telephone: 23845

199, POWER HOUSE ROAD,
JAFFNA.
"Gram: Pathukathevy"

(31 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கார் வீட்டின் முன்னே வந்து நின்றது. காரின் கதவை திறந்துகொண்டு மூவரும் இறங்கினர். அதில் ஒருவன் தன்னிடம் இருந்த திறப்பைக் கொண்டு பூட்டைத் திறந்தான். மூவரும் உள்ளே நுழைந்தனர்.

'டேய் பின் கதவு திறந்து கிடக்குது. ஓடிட்டாங்கள்.'

'மேலே பார் ஓடும் கழற்றிக் கிடக்குது.

'பின்பக்கத்தால யாரோ ஓடுறுங்கள் வாங்கோ போய்ப் பிடிப்பம்.' மூன்றுமவன் குரல் கொடுக்க, மூவரும் கதவு வழியாக ஓடினர்.

கெதியா ஓடுங்கோ, துரத்திக் கொண்டு வாருங்கள்.' சத்தியன் குரல்கொடுக்க மூவரும் வேகத்தை அதிகரித்து ஓடினர். வேலி குறுக்கே தடையாக வந்தது. சத்தியன் செய்வதறியாது திகைத்து நின்றான்.

அப்போது வேணன், 'இந்தப் பக்கத்தால போறத்துக்கு கேற் கிடக்குது. வாங்கோ இதுக்குள்ளால ஓடுவோம்.' என்று குரல்கொடுக்க, மற்றைய மூவரும் கேற்றின் வழியாக தப்பி ஓடினர். துரத்திவந்த மூவரும் அவர்களை நெருங்குவதற்குள் நால்வரும் ஒழுங்கையில் ஏறிவிட்டனர்.

'அவங்கள் ஒழுங்கைக்குப் போட்டாங்கள் இனித் துரத்த முடியாது. கெதியா காருக்குப் போங்கோ. யாரையும் கூட்டிக் கொண்டு வந்தா அகப்பட வேண்டியதுதான்.

மூவரும் வந்த வழியே ஓடத் தொடங்கினர்.

வேணன், சத்தியன், மற்றைய சிறுவர்களுமாக நான்கு பேரும் ஒழுங்கையால் விழுந்தடித்துக் கொண்டு வருவதை அவ்வழியால் வந்த சுந்தரம் கண்டுவிட்டார்.

'ஏன் எல்லோருமா பயந்து ஓடி வாறியள்' என்று சுந்தரம் கேட்க, சத்தியன் நடந்தவற்றை விபரமாகக் கூறினான்.

'சரி எல்லோரும் இதில நில்லுங்கோ.' என்று கூறிவிட்டு சுந்தரம் தெருவில் நின்ற சிலரைக் கூட்டிக்கொண்டு, தென்னந் தோப்பின் முன் ஒழுங்கையை நோக்கி ஓடினர்.

மூவரும் காரில் ஏறி இருந்ததும், கார் சீறிக்கொண்டு புறப்பட்டது. தென்னந்தோப்பை விட்டு கார் ஒழுங்கையில் இறங்கியது. ஒழுங்கையில் மாட்டுவண்டி ஒன்று மெதுவாகச் சென்றுகொண்டிருந்தது. அதனால், காரின் வேகம் தடைப்பட்டது. அந்தச் சந்தர்ப்பத்தில் சுந்தரமும் அவருடன் வந்தவர்களும் காரைச் சூழ்ந்து கொண்டனர் மூவரும் பிடிபட்டனர்.

சுந்தரம் அவர்களை பொலிஸ்நிலையத்துக்கு இட்டுச் சென்றார். குற்றத்தை ஒப்புக்கொண்டார்கள்.

மறுநாள் சத்தியனுக்கும், வேணனுக்கும் பாராட்டுகளும் பரிசுகளும் குவிந்தவண்ணம் இருந்தன.

# தோட்டத்தில் . . . .


(7 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தலைமை வாத்தியார் இவர்கள் பாடசாலை மேசைக் கடிகாரத்தைக் கையில் வைத்திருப்பதையும், கந்தசாமி ஓடிவருவதையும் கண்டு திகைத்து நின்றார்.

கந்தசாமி ஓடிவந்து தலைமை வாத்தியார் காலில் சாஷ்டாங்கமாக விழுந்தான். "ஐயா தெரியாத்தனமா திருடிட்டேன். என்னை மன்னியுங்கோ" என்று அழுதான்.

அவர் பார்வை கடிகாரத்தின் மீதும் லப்பாம் டப்பாம் மீதும் சென்றது. ஒரு சில மணித்தியாலயங்களுக்குள்ளேயே இவர்கள் துப்புத்துலக்கி விட்டார்களே என்று வியந்து அவர்களை அன்புடன் ஆரத்தழுவினர்.

# உங்கள் நோக்கு



தைப்பொங்கல் பரிசுப் போட்டியில் பரிசுபெறும் ஆக்கங்களை அர்ச்சுனாவில் வெளியிடுவதாகக் கூறினீர்கள். தயவு செய்து எனது வேண்டுகோளுக்கிணங்கப் பாராட்டுப்பெற்ற சிறுகதைகளையும் இனி வெளிவரும் அர்ச்சுனாவில் தொடர்ந்து வெளியிடும்படி கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு குறள்விளக்கச் சிறுகதைகளைத் தொடர்ந்து பிரசுரம் செய்வீர்களேயானால் 1989 ஆம் ஆண்டு மார்கழி மாதம் நடக்கவிருக்கும் கல்விப்பொதுத் தராதரச் சாதாரண பரீட்சைக்குத் தோற்றவிருக்கும் என்னைப்போன்ற மாணவர்களுக்குப் பேருதவியாக இருக்கும்.

வே. சிவநேசன்
இந்துக்கல்லூரி
யாழ்ப்பாணம்.

மாணவர்களாகிய எமக்கு நல்ல அறிவுக்குரிய விடயங்களை அர்ச்சுனா தருவதையிட்டு படித்து மகிழ்வடைகிறோம். சிறுவருக்குரிய கட்டுரைகள் கவிதைகள் கதைகள் நன்றாக இருக்கின்றன. முகப்புபடமும் அழகாக இருக்கிறது. அர்ச்சுனாவின் சேவை எமக்குத் தேவை.

அத்தியார் இந்துக் கல்லூரி க. நிரஞ்சன்
நீர்வேலி

மனதைக் கொள்ளை கொள்ளும் அர்ச்சுனாவின் திங்கள் இதழ் எப்போது வருமென என ஆவலுடன் எதிர்பார்ப்பேன்

செல்வன். ந. நகுலேஸ்வரன் உமாபதி
நாகர்கோவில் மகா வித்தியாலயம்
நாகர்கோவில்

"அம்பு வித்தைக்கு அர்ச்சுனன், அறிவு வேட்கைக்கு அர்ச்சுனா"

தமிழ் நாட்டில் உள்ள கோகுலம் இதழ் போல் ஈழத்திலும் சிறுவர் இதழாக அர்ச்சுனா தொடர்ந்துவர எனது வாழ்த்துக்கள்.

புளியங்கூடல், தெற்கு சி: சிவாஸ்க்கரன்
ஊர்காவற்றுறை.

இலை மறை காய் போலுள்ள
ஈழத்துத் தமிழ்ச் சிறுவர்
கலை இலக்கியப் புலமையினை
கணித அறிவியல் திறமைகளை
வெளிக்காட்டும் கொள்கையுடன்
அறிவலையைப் பாய்ச்சுகின்ற
அர்ச்சுனா நீ வாழ்க.

யூனியன் கல்லூரி க. திலீபன்
தெல்லிப்பழை.

தங்களின் வர்ணவெளியீடாய் மலர்ந்து கல்வி, முயற்சி, பெருவாழ்வு எனும் நல் நோக்கில் அமையும் அருச்சுனா பல்லாண்டு காலம் பவனிவரவேண்டும் என்பது எனது அவாவாகும்.

எம்மை மகிழ வைக்கும் அருச்சுனா என்றென்றும் வாழ வேண்டுகிறேன்.

பண்டத்தரிப்பு குழந்தைவேல்சிறீதரன்
இந்துக்கல்லூரி

கனம் அர்ச்சுனா ஆசிரியரவர்கட்கு,

எல்லாத்துறையிலும் பல விடயங்களைத் தாங்கி வருகின்ற 'அர்ச்சுனா' வில் ஆங்கிலத்திலும் எமக்கு விளங்கக்கூடிய விடயங்களில் சிலவற்றைப் பிரசுரித்தால் நல்லது.

புலவர் இல்லம் தி-இராஜ்குமார்
உடுப்பிட்டி

காலம் நீடித்தல், மறதி, சோம்பல் அளவு மீறிய தூக்கம் ஆகிய நான்கையும் தன்திறமை மூலம் துரத்தியடிப்பது 'அர்ச்சுனா' வாகும் இதன் பணி தொடர வாழ்த்துகிறேன்.

கோண்டாவில் தே. சயந்தன்

# அன்புத் தங்கை

சின்னத் தங்கை வேணி கன்னம்
சிவக்கச் சிரிக்கிறாள்
கன்னற் தமிழில் கனிந்த மழலைக்
கதைகள் உரைக்கிறாள்

கண்ணைச் சிமிட்டிக் கைகள் தப்டிக்
களிப்பைக் கூட்டுவாள்
அண்ணா என்றென் தோளிற் தாவி
ஆடிக் காட்டுவாள்

அன்னை தந்தை மடியிற் துள்ளி
அழகை விரிக்கிறாள்
என்னைத் தன்னோ டினிய பாடல்
இசைக்க அழைக்கிறாள்

உறவில் மலர்ந்த இனிய தங்கை
உள்ளத் தினிக்கிறாள்
பறவைக் குஞ்சாய்ப் பறந்து பறந்து
பழகிச் சிரிக்கிறாள்

செ. மகேந்திரன்

# எங்கள் பூனை

எங்கள் வீட்டுப் பூனை
எலி பிடிக்கும் பூனை
அப்பா தந்த பூனை
அழகான பூனை

கண்ணை மெல்ல உருட்டியே
கனிவாய் என்னைப் பார்க்குமே
துள்ளிக் குதித்து என்னுடன்
துன்பம் இன்றி வாழுமே

அபிராமி

# கிரிக்கெட் . . . .

(3 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தான் இளைப்பாறிய பின்னும் பிராட்மன் சும்மாக இருக்கவில்லை. கிரிக்கட் பிரியாவிடை (1948 ல்) கிரிக்கட்கலை (1958) ஆகிய கிரிக்கட்டை வளர்க்கும் நூல்களை எழுதினார்.

ஆனால் வானொலியிலோ, தொலைக்காட்சியிலோ இவரது பேட்டிகளை வழங்காது மௌனமாகவிருந்தார். ஆனால் அண்மையில் இவரது புதிய பேட்டி அடங்கிய தொலைக்காட்சித் தொடர் உலக நாடுகளில் தொலைக்காட்சிகளில் ஒளிபரப்பானது. தற்போது தனது கிரிக்கட் பொருட்களை வைத்து ஒரு அருங்காட்சிகயத்தை அமைத்துள்ளார்.

இவ்வாறு கிரிக்கட் உலகின் பொற்கால மனிதனாக இருந்து உலக கிரிக்கட் ரசிகர்களின் மனதில் இடம்பெற்றார் பிராட்மன்.

கடைசியாக ஒரு குறிப்பு இவரது 10,000 ஓட்ட சாதனையை நம் அண்டை நாடான இந்திய அணிவீரரான சுனில் மனோகர் கவாஸ்கர் முறியடித்தார்.

இதன்படி பிராட்மனின் கிரிக்கட் வாரிசு கவாஸ்கர் என கிரிக்கட் வீரர்கள் வியக்கின்றனர்.

அடுத்த 10,000 ஓட்டங்களை எட்ட விரும்பவர்கள் இந்திய அணி வெங்சர்க்கார், பாகிஸ்தான் அணி மியாந்தத்.

★



# ஞானக்கதிர்

## இந்து சமய மாத மஞ்சரி

சமய அடியார்கள் சமய ஞானிகள் ஆர்வலர் கள் ஆவலுடன் எதிர்பார்த்த இந்து சமய மாத மஞ்சரி!

இந்து சமய அறிவொளி பரப்ப எழுந்து வந் துள்ளது.

### விரைந்து வாருங்கள்

உதயன் விற்பனை முகவர்களிடம் பிரதிகளைப் பெற்றுக் கொள்ளலாம்.

விலை ரூபா 5/-

ஆண்டுச் சந்தா ரூபா 70/-

ஆண்டுச் சந்தாவை காசோலை அல்லது காசுக்கட்டளை மூலம்" நியு உதயன் பப்பிளிக் கேஷன்ஸ் பிறைவேட்) லிமிட்.'' என்று எழுதி அனுப்பினுல் அஞ்சல் மூலம் மாதந் தோறும் பெறலாம்.

ஈழத்து ஆலயங்களின் பெருமைகள், ஞானிகளின் வரலாறுகள் அற்புதங்களை அறிவதற்கு தவருது படியுங்கள் ஞானக்கதிர்.



இச்சிறுவர் இலக்கியத் திங்களிதழ் நியூ உதயன், பப்பிளிக்கேஷன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் 15, 2வது ஒழுங்கை, மின்சார நிலைய வீதியில் உள்ள அவர் களது அச்சகத்தில் வெளியிடப்பட்டது.

# கூர்ந்து கவனியுங்கள்!



'ஷப்ரு'வின்

- மாதாந்த சேமிப்புத் திட்டம்.
- உங்கள் குழந்தை வளரும் போதே உங்கள் சேமிப்பு வளர்வதை உறுதி செய்யுங்கள்.
- மாதாந்தம் சிறு தொகை சேமித்து குறுகிய காலத்தில் பெருநிதி பெறும் திட்டம்.
- உழைக்கும் போதே சேமிக்கும் திட்டம்.

## இன்றே நாடுங்கள்

| | 1 வருடம் | 2 வருடங்கள் | 3 வருடங்கள் |
|---|---|---|---|
| ரூபா | 12% | 14% | 16% |
| 100/= | 1,280.93 | 2,783.41 | 4,643.27 |
| 200/= | 2,561.86 | 5,566.82 | 9,286.54 |
| 300/= | 3,842.79 | 8,350.23 | 13,929.81 |
| 400/= | 5,123.72 | 11,133.64 | 18,573.08 |
| 500/= | 6,404.65 | 13,917.05 | 23,216.35 |
| 600/= | 7,685.58 | 16,700.46 | 27,859.62 |
| 700/= | 8,966.51 | 19,483.87 | 32,502.89 |
| 800/= | 10,247.44 | 22,267.28 | 37,146.16 |
| 900/= | 11,528.37 | 25,050.69 | 41,789.43 |
| 1000/= | 12,809.30 | 27,834.10 | 46,432.70 |

## ஷப்ரு யுனிக்கோ பினன்ஸ் லிமிட்டெட்

61, நியூ புல்லர்ஸ் வீதி,
கொழும்பு- 4.
தொலைபேசி: 589310, 500576.

207, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.